Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி.
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11750)


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-05 19-05-2005 வியாழக்கிழமை ஓசை 90

# சனாதிபதி பொதுக்கட்டமைப்பு விடயத்தில் மனப்பூர்வமாக ஈடுபடுதல் வேண்டும்!

## -கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்து



(லண்டன்)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான செயற்பாடுகளில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மனப்பூர்வமாக ஈடுபட்டு அது தொடர்பான இறுதி வடிவ ஒப்பந்தத்தில் கையொப்பமிட முன் வரவேண்டுமென விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் விசேடதூதுவர் எரிக்சூல்ஹெய்ம், நோர்வேயின் வெளிவிகார அலுவலர் லிசா கோல்டன் ஆகியோர் நேற்று லண்டனில் அன்ரன் பாலசிங்கம் அவர்களைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இச்சந்திப்பு இரண்டு மணி நேரம் நடைபெற்றது.இச் சந்திப்பின்போது ஒஸ்லோ சமாதான முயற்சிகளின் தற் போதைய நிலைகுறித்து ஆராய்ந்ததாகவும் லண்டனிலுள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)

## - கண்டியில் நடைபெற்ற மாநாடு -

# உலகை தவறான வழியில் திசை திருப்ப இலங்கை அரசாங்கம் எடுத்த முயற்சி

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

**கண்டியில் நடைபெற்ற மாநாடு முழுக்க முழுக்க இலங்கை அரசாங்கத்தினுடைய மாநாடுதான். சர்வதேச சமூகத்தை அழைத்து ஒருபக்கச் சார்பாக நின்று தமது கருத்துக்களைக் கூறி நம்பவைத்து சர்வதேச சமூகத்தினுடைய உதவிகளைப் பெறும் நோக்குடன் இம் மாநாடு நடத்தப்பட்டது என அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

தமிழீழ தேசியத் தொலைக்காட்சிக்கு அவர் வழங்கிய பேட்டியில் தெரிவித்ததாவது;

இலங்கை சனாதிபதியினுடைய வாய்ச்சவடால்கள் இப்பொழுதும் வெளிப்பட்டு இருக்கின்றதெனவே நான் நினைக்கின்றேன்.

சர்வதேச சமூகத்தை எப்படியாவது நம்பவைத்து ஏமாற்றி சர்வதேச உதவிகளைக் கவர்ந்துகொள்ளும் நோக்கத்தோடுதான் சனாதிபதி இப்படியான கதைகளை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கின்றார்.

அந்த வகையில் இலங்கையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பின் பெயரை மாற்ற சந்திரிகா தீர்மானம்!

சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு பகுதிகளை மீளமைக்க அமைக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பின் பெயரை மாற்றியமைக்க சனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதாக அரச சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது. இதன்படி சுனாமியின் பின்னான முகாமைத்துவச் செயற்பாட்டு வியூகம் என்று இது பெயரிடப்படும் சனாதிபதியும், அதிகாரிகளும் கலந்தாலோசித்த பின்பே இந்தப்பெயரை மாற்றுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.இந்தச் சுனாமியின் பின்பான முகாமைத்துவ வியூகத்தின் மூலம் சுனாமியால் இடம்பெயர்ந்த வடக்கு-கிழக்கு மக்களுக்கு சேவைசெய்யும்போது நலன்புரி நடவடிக்கைகள் மாத்திரம் நிகழும் என்று சமாதானச்செயலகம்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் பாதுகாப்புடன் சென்ற ஈ.பி.டி.பி.உறுப்பினர் சுட்டுக்கொலை!

## -மட்டு.பொதுச்சந்தையில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொதுச்சந்தையின் பிரதான வாசலில் வைத்து ஈ.பி.டி.பி உறுப்பினரான மோகன் எனப்படும் ஆறுமுகம் முருகுப்பிள்ளை (வயது35) என்பவர் இனந்தெரியாத துப்பாக்கிதாரியினால் நேற்று முற்பகல் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின்போது சந்தைக்குப் பொருட்களை வாங்க வந்த முகத்துவாரத்தைச் சேர்ந்த வியாபாரியான வேலுப்பிள்ளை நவரத்தினம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் சூரியமூர்த்தி காயம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரசபை முன்னாள் தலைவர் சூரியமூர்த்தி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக்காயமடைந்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

## -பொதுக்கட்டமைப்பு தொடர்பில்-

# சனாதிபதியுடன் பிரதமர் உட்பட சு.கட்சியின் பலர் இணக்கப்பாடில்லை!

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் சனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாட்டுடன் சிறிலங்காவின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உட்பட சிரேஷ்ட அமைச்சர்கள் கூட இணக்கப்பாடான நிலைக்கு வரவில்லை என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் மங்களசமரவீர, அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அமைச்சர் சரத்அமுனுகம ஆகியோர் இதுவரை தமது கருத்துக்களை வெளிப்படையாகக் கூறாது தவிர்த்து வருகின்றனர்.

பொதுக்கட்டமைப்புக் குறித்து அவர்களை இணங்கச் செய்வதில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்னமும் வெற்றிபெறவில்லை

(12ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் இரண்டாவது நாளாக ஹர்த்தால் பதற்றமான சூழல் நேற்றும் தொடர்ந்தது

## -போ.நி.க.குழு நிலைமைகளை அவதானிப்பு

(திருமலை)

திருமலை நகரில் அமைக்கப்பட்ட சர்ச்சைக்குரிய புத்தர்சிலையை அகற்றக்கோரி இரண்டாவது நாளாக நேற்று நடத்தப்பட்ட ஹர்த்தால் மற்றும் கதவடைப்புப் போராட்டத்தில் திருமலை நகரம் பூரண ஸ்தம்பித நிலையை அடைந்தது.

திருமலை தமிழ்மக்கள் பேரவை இதற்கான அழைப்பை விடுத்திருந்தமை தெரிந்ததே. இதேவேளை புத்தர்சிலையை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில் நகரப் பகுதி பதற்றமும், பரபரப்பும் நிறைந்ததாகக் காணப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க நேற்று முன்தினம் மாலை பத்தாம் குறிச்சி பகுதி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட கொம்பனிப்பிள்ளையார் ஆலயப் பகுதி அதனை அடுத்துள்ள பகுதிகள் மற்றும் குண்டு வீச்சுக்கு இலக்கான மரத்தடிப் பகுதி என்பவற்றை மாவட்ட போர் நிறுத்தக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# சர்ச்சைக்குரிய புத்தர்சிலையை அகற்ற திருமலை நீதிமன்ற நீதவான் உத்தரவு!

(திருமலை)

திருகோணமலை நகரில் பேருந்து நிலையமருகே அமைக்கப்பட்ட புத்தர்சிலையை அகற்றுமாறு நேற்று திருமலை நீதிமன்ற நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான எம். கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

புத்தர்சிலை ஒன்று நிறுவப்பட்டது தொடர்பாக பொலிசார் சமர்ப்பித்த மனு மீதான விசாரணை நேற்றுக்காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

“சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நேரடியாகப் பேசி தற்காலிகமாக அப்புத்தர் சிலையை அகற்றுவதற்கு முடியுமானவரை நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதன் பின்னர் நகரசபையால் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதன் மூலம் இந்தப் புத்தர்சிலை விவகாரத்திற்குத் தீர்வுகாண முடியும்” என்று நீதிபதி கணேசராஜா இருதரப்பு சமர்ப்பணங்களையும் கேட்ட பின்னர் வழங்கிய தீர்ப்பில் குறிப்பிட்டார்.

“ திருகோணமலை நகரில் பல இந்து வழிபாட்டுத்தலங்கள் சட்ட விரோதமான முறையில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக முறைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

இராஜ்குமார் என்பவரது பேஸ் உடன் அடையாள அட்டையும் (812434918V) புதுக்குடியிருப்புக்கும் விசுவமடுவுக் குமிடையில் தவிறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தருமபுரம் றியோவில் அல்லது கிளிநொச்சி நிலாப்பதிப் பகத்தில் ஒப்படைக்கவும்.(6146)

### 2005-A/L

A/L பரீட்சைக்குரிய பொது அறிவு, பொதுஆங்கிலம் உயர்கல்விச் சேவை நிலையத்தால் வெளியிடப் பட்டுள்ளது. வன்னியிலுள்ள சகல அறிவமுது புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (6134)


# “வன்னிரெக்” நிறுவனத்தின் இலவச கணனிக் கண்காட்சி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி உயர்தொழில் நுட்ப நிறுவனமான ‘‘வன்னிரெக்’’ இலவச கணனி செயல்முறைக் கண்காட்சி நேற்றுக் காலை ஒன்பது மணிக்கு கிளிநொச்சி வன்னி தொழில் நுட்பவியல் நிறுவகத்தில் வைபவரீயாக ஆரம்பித்துவைக்கப் பெற்றது.

வன்னி தொழில் நுட்பவியல் முதல்வர் சாந்தராகவன் தலைமையில்இந்நிகழ்வு இடம்பெற்றது. இலவச கணனிக் கண்காடசியினை முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் நாடாவினை வெட்டி ஆரம்பித்துவைத்தார். முதல் நாளான நேற்றையதினம் பெருந்திரளானமாணவர்களும், ஆசிரியர்களும் கணனி செயல்முறைக் கண்காட்சியினை கண்டு விளக்க முறைகளை கேட்டு அறிந்து கொண்டனர். இக் கண்காட்சி இன்றும், நாளையும் காலை 9.30 முதல் மாலை 5.30 வரை நடைபெறுமென்பதும் குறிப்பிடத்தக்கது. (சோ)

### கூட்டம் பிற்போடப்பட்டது

இன்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவிருந்த கிளிநொச்சி மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது எனவும, புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

### முக்கிய கலந்துரையாடல்

(மல்லாவி)

பாண்டியன் குளம் பிரதேசத் திற்குறப்பட்ட பாடசாலை முதல்வர் கள் மற்றும பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கான மாணவர் எழுச்சி நாள் சம்பந்தமான முக்கிய கலந்துரையாடல் இன்று நடை பெறவுள்ளது.

இக் கலந்துரையாடல் காலை 10.00 மணிக்கு பனங்காமம பற்று ப.நோ.கூ.சங்க ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறும். சம்பந் தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாண்டின் குளம் பிரதேசப் பொறுப்பாளர் சி.இலக்கியன் தெரிவித்தார். (24)


## சேவை நலன் பாராட்டுவிழா



### திரு.க.வைரவநாதன்

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் கிராமத்தில் சேவை புரிந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் கிராமசேவை அலுவலர் திரு. க.வைரவநாதன் அவர்களுக்கான சேவை நலன் பாராட்டுவிழா 19.05.2005 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கிருஸ்ணபுரம் றொபேட் முன்பள்ளியில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

கிராம அபிவிருத்திச் சங்கம்,
கிராம மாதர் சங்கம்,
கிருஸ்ணபுரம்.

(சி.2004)



அம்மன் துணை

அம்மன்துணை

## அம்மன் அருள் அகிலமெல்லாம் பாலிக்குக

பச்சிலைப்பள்ளியூர்

முகாவில் திரியாய் அம்மன் ஆலய ஆண்டு உற்சவ

## வைகாசி விசாக திருக்குளிர்த்திப் பொங்கல் 20-05-2005

அம்பிகை அடியார்களே!

நிகழும் பார்த்திப வருடம் வைகாசி 6ஆம் நாள் (20-05-2005) வெள்ளிக்கிழமை பகலும், இரவும் விஷேட பூசை ஆராதனைகளும், அடியார்களின் நேர்த்திக்கடன்களும், திருக்குளிர்த்திப் பொங்கலும் இடம்பெறும். அன்றைய தினம் அடியார்கள் பூசைக்குரிய பால், இளநீர், பூ,பூமாலை போன்ற பூசைப்பொருட்களை ஆலயத்தில் ஒப்படைத்து அம்பாளின் திருவருளைப் பெற்றேகும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## அன்னதானமும் வழங்கப்படும்

குறிப்பு:- ஆலயத்தின் வளர்ச்சி கருதி அர்ச்சனைப் பொருட்கள் ஆலய நிர்வாகிகளால் விற்பனை செய்யப்படும். பிரத்தியேகமாக விற்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினம் போக்குவரத்து சேவையும், நீர் விநியோகமும், ஒலி ஒளி சேவைகளும் வழமைபோல் இடம்பெறும்.

வர்த்தகர்கள் கவனத்திற்கு:- முற்கூட்டியே இடங்களைப் பதிவு செய்து கொள்ளவும்

முகாவில்,
இயக்கச்சி.

இங்ஙனம்,
ஆலய பரிபாலன சபை



## சிவனருட்செல்வன் அரிசி ஆலையின் புதிய அறிமுகம்

### பூநகரி மொட்டைக்கறுப்பன் குத்தரிசி

வன்னிப்பெருநிலப்பரப்பில் வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப
100 வீதம் கல், மண் நீக்கப்பட்ட தரமான
பூநகரி மொட்டைக்கறுப்பன் குத்தரிசியினை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.




### சிவனருட்செல்வன் அரிசி ஆலை

உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி.

சம்மந்தன் அரிசி ஆலை

இல:93, கந்தபுரம், கிளிநொச்சி.



### திருமதி.லலிதாவதி குணசிங்கம்

(B.A. Dip in ED) அவர்கள்

## சேவை நலன் பாராட்டும், பிறந்த நாள் வாழ்த்தும்

பண்பிலே சிறந்தவராய், பழகுவதற்கு இனியவராய், அன்பிற்கு இலக்கணமாய், ஆளுமையின் சிகரமாய் திகழ்ந்து எம் பிள்ளைகள் எல்லாம் தம் பிள்ளைகள் என்று தரணியிலே அவர்கள் ஆண்டுகள் பல நிமிர்ந்து வாழ ஆசிரியம் புரிந்து ஓய்வு பெற்றுச் செல்லும் தாங்கள் சீரும் சிறப்புடனும் வாழ பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு.செ. பாலராசா,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
மு/புதுக்குடியிருப்பு.
மத்திய கல்லூரி.

தனது பணியில் இருந்து ஓய்வுபெறும் இவர் உயர்தர வகுப்புக்களில் தமிழை ஒரு பாடமாகக் கற்பித்து பல நூறு மாணவர்களைப் பல்கலைக்கழகம் அனுப்பிய பெருமையும், பாடசாலையின் முகாமைத்துவம், கலாச்சாரம், சமய விழுமியங்களோடு உள்ளக நிர்வாகத்தையும் இறுக்கமாக வழி நடத்தியதுடன், பள்ளியின் நீண்டகால வரலாற்றில் அதிகம் பங்குகொண்ட திருமதி. லலிதாவதி குணசிங்கம் ஓய்வின் பின் சகல செளபாக்கியங்களும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றேன்

ச.நாகரட்ணம்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
முல்லைத்தீவு.

உயிரில் கலந்த உறவுக்கு....... கல்லூரிப் புலத்தின் கலங்கரை விளக்காய் திகழ்ந்து கற்ற கல்வியைக் கசடறப் புகட்டி. இன்பத் தமிழை இதமுடன் ஊட்டி தாயாய்,சேயாய் எம்முடன் சேர்ந்து இருபது ஆண்டுகள் நட்புறவு கொண்டீர். இன்று அகவையின் முதிர்வினால் இளைப்பாற வேண்டிய தேவையும் வந்ததோ? இன்று போல் என்றும் சுகத்தோடும், வளத்தோடும் உம் உறவோடு வாழ இறையாசி வேண்டி நிற்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
புதுக்குடியிருப்பு,
மத்திய கல்லூரி.

பொன்விழாக்காணும் இக்கல்லூரியின் அரைவாசிக் காலம் கற்பித்த பெருமை உடையவர். ஆசிரியராக, பிரதி அதிபராக, பதிலதிபராக இக்கல்லூரியின் நிர்வாகத்தை செவ்வனே வழி நடத்தியவர். கல்வியறிவும்,கண்டிப்பும் ,சிறந்த நிர்வாகத்திறனும், ஆளுமையும் கொண்ட ஒருவரை இப்பாடசாலை இழந்து நிற்பது கவலையளிக்கிறது. இருப்பினும “வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.”

அதிபர்,
மு/புதுக்குடியிருப்பு
மத்திய கல்லூரி.

இலட்சிய நாயகி.........

ஆசிரியராக, பிரதி அதிபராக, சில ஆண்டுகள் அதிபராகவும் பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும் பாடுபட்டவர். இவரது ஓய்வுக் காலம் கலலூரியின் வளர்ச்சியில் ஒரு தடங்கலே ஆகும். கல்வி வளர்ச்சியில் மாணவர் நலனையுமே தனது இலட்சியமாகக் கொண்டு அயராது உழைத்து புகழோடு ஓய்வு பெறும் இவர் வரும் காலத்திலே சீரும் சிறப்பும் பெற்று ஒளி மயமாய் வாழ வாழ்த்துகிறேன்.

திருமதி.கு.சிவசுந்தரம்
பிரதிஅதிபர்,
மு/புதுக்குடியிருப்பு ம.கல்லூரி.

(சி12005)

# குர்ஆனை அவமதிக்கும் கட்டுரை
# வாபஸ் பெற்றது நியூஸ் வீக்

(நியூயோர்க்)

**இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆனை அவமதிக்கும் விதத்தில் கட்டுரை வெளியிட்ட'நியூஸ் வீக்'பத்திரிகை, அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டதுடன் அந்தக் கட்டுரையையும் உடனடியாக வாபஸ் பெற்றுள்ளது.**

குவான்டனமோ சிறையில் குர்ஆன் புத்தகத்தை அவமதிக்கும் வகையில், அமெரிக்க இராணுவ வீரர்கள் நடந்து கொண்டனர் என்ற தகவல் வெளியானது. இது குறித்து கடந்த ஒன்பதாம் திகதி இதழில் 'நியூஸ்வீக்' ஒரு கட்டுரை வெளியிட்டது. அதற்கு இஸ்லாமிய நாடுகளில் கடும் எதிர்ப்புகள் கிளம்பின. பயங்கர வன்முறையில் ஆப்கானிஸ்தானில் 15 பேர் பலியாயினர். இது குறித்து அமெரிக்க அதிபர் புஷ் நிர்வாகமும் உடனடியாக விசாரணையில் இறங்கியது. நியூஸ்வீக் பத்திரிகையிடமும் விசாரணை நடத்தப்பட்டது.

இந்நிலையில், 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகைக்கு , நியூஸ் வீக் பத்திரிகை ஆசிரியர் மார்க் விடேகர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது,

குவான்டனமோ சிறையில் நடந்த சம்பவங்கள் குறித்து இராணுவத் தரப்பில் இருந்து சில தகவல்கள் எங்களுக்கு வந்தன. அதைக் கூறியவர்கள், தற்போது முன்னுக்குப் பின் முரணாகக் கூறுகின்றனர் இஸ்லாமியர்களின் மனதைப் புண்படுத்தும் வகையில் கட்டுரை வெளியானதற்கு நாங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டோம். கட்டுரை தவறாகிவிட்டதால் அதை உடனடியாக நாங்கள் வாபஸ் பெற்று விட்டோம்.

இப்பிரச்சினையை மேலும் பெரிதாக்கவிரும்பவில்லை. அதனால் கட்டுரை வாபஸ்பெறப்பட்டது. நியூஸ் வீக் இதழில் வெளியான கட்டுரையால் பெரும் பிரச்சினை ஏற்பட்டு விட்டது. சிலர் உயிரிழந்த சம்பவங்களைக் கேட்டு மிகவும் வருத்தம் அடைந்தோம். இவ்வாறு மார்க்விடேகர் கூறினார்.

நியூஸ் வீக் முடிவை வெள்ளை மாளிகை வரவேற்றுள்ளது. எனினும் சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியூஸ் வீக் சார்பில் ஏதாவது செய்தாக வேண்டுமென்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.



பாக்தாத்திற்கு வட கிழக்கே 60 கி.மீ அப்பாலுள்ள பக்குவாவில் நேற்று நடைபெற்ற கார்க்குண்டுத்தாக்குதலின் சிதைவுகளை ஒருவர் அகற்றுகின்றார். இக் குண்டுத்தாக்குதலில் 12 பொலிசார் உட்பட 14 பேர் காயமடைந்தனர்.

# 23 ஆயிரம் பேர் பங்கேற்ற மனிதச் சங்கிலிப் போராட்டம்

(டோக்கியோ)

ஜப்பானிலுள்ள ஒக்கியானா தீவில் இருந்து அமெரிக்க இராணுவ தளத்தை வெளியேற்றக் கோரி அங்கு ஜப்பானியர்கள் பலவித போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

இந்தக் கோரிக்கைக்காக மனித சங்கிலிப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதில் 23 ஆயிரம் பேர்பங்கேற்றார்கள்.

# தீவிரவாத சம்பவங்களுக்கு சிரியாவே உதவி வருகிறது

(ஷனான்)

'ஈராக்கில் நடந்துவரும் தீவிரவாதச் சம்பவங்களுக்குச் சிரியா உதவி வருகிறது' என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசா ரைஸ் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் சதாம் ஆட்சி வீழ்ந்தபிறகு தீவிரவாத சம்பவங்கள் அதிகரித்து விட்டன. தினசரி குண்டு வெடிப்புக்களால் ஆயிரக் கணக்கான மக்கள் பலியாகி வருகின்றனர். இந்த நிலையில் ஈராக்கில் நடக்கும் தீவிரவாத சம்பவங் களுக்குச் சிரியா மறைமுகமாக உதவிவருவதாக கொண்டலிசாரைஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன் ஈராக்கிற்குத் திடீர் பயணம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை அறிந்தார் ரைஸ். தற்போது அவர் அயர்லாந்திற்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். ஷனான நகரில் இது குறித்து அவர் குறிப்பிடுகையில், "ஈராக்கில் நடக்கும் தீவிவாத சம்பவங்களுக்குச் சிரியா உதவி வருகிறது. ஈராக் தீவிரவாதிகளின் புகலிடமாக சிரியா இருந்து வருகிறது. இஸ்ரேல் எதிர்ப்புத் தீவிரவாதிகளுக்கும் சிரியா பகிரங்கமாகவே உதவி வருகிறது, என்றார்.



-ரைஸ்

# பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் வடகொரிய கப்பலொன்று ஜப்பான் பயணம்

வடகொரியா அணுகுண்டு ஒன்றை பரீட்சிக்கத் தயாராகி வருவதாக செய்திகள் வெளியான நிலையில் அந்நாட்டின் கப்பலொன்று நேற்று ஜப்பானின் துறைமுகத்திற்குச் செல்கின்றது.

இந்தக் கப்பல் வட ஜப்பானின் துறைமுகமொன்றைச் சென்றடைந்தபோது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டுள்ளது. குறித்த கப்பல் துறைமுகத்தினுள் பிரவேசித்ததை எதிர்த்துப் பலர் எதிர்ப்புப் பதாகைகள் தாங்கிய வண்ணம் ஆர்ப்பாட்டம் செய்துள்ளார்கள்.

பல வருடங்களுக்கு முன்னர் ஷியாங் ஷாங்கின் முகவர்கள் ஜப்பானியப் பிரஜைகளைக் கடத்திச் சென்றதற்குப் பின்னர் ஜப்பானில் வடகொரியாவிற்கு எதிரான உணர்வலைகள் மேலோங்கியுள்ளன. ஜப்பானியத் துறைமுகம் சென்றடைந்த வடகொரியக் கப்பல் முன்னர் போதைப்பொருள் மற்றும் ஏவுகணைப் பாகங்கள் கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாக ஜப்பானிய நுண் ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

இக் கப்பல் துறைமுகம் சென்றடைந்ததும் சீருடைஅணிந்த ஜப்பானிய உத்தியோகத்தர்கள் அதைப் பரிசோதனை செய்யும் முயற்சியில் ஈடுபடுவார்களென்றும் தெரிவிக்கப் படுகின்றது.




பாக்தாத்தில் கார்க் குண்டுத் தாக்குதலில் காயமடைந்த சிறுமி ஒருவருக்கு மருத்துவமனையில் தாதியொருவர் சிகிச்சை அளிப்பதையும், அருகில் தாயார் ஆறுதல் கூறுவதையும் காணலாம்.

## பங்களாதேஷில் வேலை நிறுத்தம்

பங்களாதேஷில் எதிர்க்கட்சியினர் தமது கட்சிஉறுப்பினர் ஒருவர் கொல்லப் பட்டதற்கு எதிராக நேற்று வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். இதனால் கடைகளும் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டதுடன், வீதிகளும் வெறிச்சோடிக் கிடந்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவாமிலீக்கின் செயலாளர் கோசின் அலாம் நேற்று முன்தினம் டாக்காவில் வைத்து இனந்தெரியாத துப்பாக்கி நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முன்னாள் பிரதமர் சேக் ஹசீனா தலைமையிலான அவாமிலீக் தெரிவித்த தகவலில் அலாமின் மரணம் திட்டமிடப்பட்ட அரசியல் படுகொலை எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.



புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட லொஸ் ஏஞ்சல் ஆளுனர் அன்ரனியோ வில்லறிகோசா அவருடைய மனைவி கொறினா (வலது), அவருடைய மகன் (இடது) ஆகியோருடன் கைகோர்த்து நிற்கின்றார்.


# மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தாக்குதல் 9 ராணுவத்தினர் உட்படப் 10பேர் பலி

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் திடீர்த்தாக்குதல் நடத்தியதில், இராணுவ வீரர்கள் ஒன்பது பேர் உட்படப் பத்துப் பேர் உயிரிழந்தனர். இது குறித்து நேபாள இராணுவ அதிகாரிகள் நேற்று முன்தினம் கூறியதாவது,

நேபாளத்தில் அவசர நிலையை மன்னர் ஞானேந்திரா வாபஸ் பெற்றபின், தீவிரவாதிகள் மிகப்பெரிய தாக்குதலை நடத்தினர்.தலைநகர் காத்மண்டுவில் இருந்து 250 மைல் கிழக்கில் உள்ளது உதயபூர் மாவட்டம். இந்த மாவட்டத்தைச் சேர்ந்த லெக்கோவான் பகுதியில் மாவோயிஸ்ட்தீவிரவாதிகள் கடந்த திங்கட்கிழமை திடீர்த்தாக்குதல் நடத்தினர். இராணுவத்தினரும் பதிலடி கொடுத்தனர். எனினும், தீவிரவாதிகளின் தாக்குதலில் இராணுவவீரர்கள் ஒன்பது பேர் பலியாகினர்.பொலிஸ்காரர் ஒருவரும் பலியானார்.

தீவிரவாதிகளிலும் பலர் இறந்திருக்க வேண்டும். அது பற்றிய தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை. இவ்வாறு இராணுவ அதிகாரிகள் கூறினர்.




*பிரிட்டனில் நடந்த பொதுத்தேர்தலில் தொழிலாளர் கட்சி மூன்றாவது முறையாக ஆட்சியைப் பிடித்தது. நேற்று முன்தினம் ராணி இரண்டாம் எலிசபெத் சம்பிரதாயப்படி பாராளுமன்றக் கூட்டத்தை தொடக்கிவைத்துப் பேசினார். பிரிட்டன் பிரபுக்கள், சபையின் ராணி எலிசபெத், அவரது கணவர் எடின்பார்க் கோமகன் அமர்ந்துள்ளனர்.*

# விடுமுறையை இரத்துச் செய்ததால் பிரான்சில் வேலை நிறுத்தம்

(பரிஸ்)

பிரான்சில் தேசிய விடுமுறையை அரசு இரத்து செய்ததால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

பிரான்ஸில் கடந்த 19 ஆம் நூற்றாண்டு முதல் 'வெள்ளை திங்கள்' (வையிட்மன்டே) என்ற அறுவடைத் திருவிழாவையொட்டி விடுமுறை விடப்பட்டு வந்தது. முதியோர் நலனுக்கு நிதியை அதிகரிக்கும் பொருட்டு இந்த விடுமுறை இன்று பிரான்ஸ் அரசு சமீபத்தில் இரத்துச் செய்தது. இதைக் கண்டித்து தொழிலாளர் சங்கங்கள் வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தன. கடந்த திங்களன்று அனைத்துத் தொழிலாளர்களும், மாணவர்களும் வேலை நிறுத் தத்தில் ஈடுபட்டனர். போக்குவரத்துத் தொழிலாளர்களும் வேலை நிறுத் தத்தில் ஈடுபட்டதால் பரிஸ் உள்ளிட்ட நகரங்களின் சாலைகள் வெறிச் சோடிக் காணப்பட்டன.



பஸ்றாவில் பிரித்தானியப் படைகளைப் பார்வையிடச் சென்ற புதிய பிரித்தானிய பாதுகாப்புச் செயலாளர் ஜோன் ஹெய்ட் படையினருடன் உரையாடுகின்றார்.

# தமிழீழ நிர்வாக சேவையினரால் தற்காலிக காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்

(புதுக்குடியிருப்பு )

**தமிழீழ நிர்வாக சேவையினரால் வழங்கப்படும் தற்காலிக காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை ஒன்பது மணிக்கு புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது.**

புதுக்குடியிருப்பு கோம்பாவில் விக்கினேஸ்வரா பாடசாலையில் முல்லை மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி தலைமையில் இது இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரை கோம்பாவில் பகுதி கிராமஅலுவலர் தர்மராசா ஏற்றிவைக்க, தேசியக் கொடியை தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லை மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் முரளி, தமிழீழ தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் சஞ்சை, கிராம அலுவலர் செ.தர்மராசா ஆகியோர் உரையாற்றினர்.

சம்பிரதாய பூர்வமாக முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் காணிக்கான அனுமதிப் பத்திரம் ஒன்றைக் காணி உரிமையாளரிடம் கையளித்தார்.

இந் நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் கலந்துகொண்டதுடன் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட மக்களும் கலந்து கொண்டனர். (08)




நோர்வே ஜேர்மன் நிதியுதவியுடன் முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீன்பிடி உபகரணங்களை வழங்கியபோது. (20)

# நிறுத்தலளவைக் கருவிகளுக்கு முத்திரையிடல்

(பூநகரி)

பூநகரிப்பகுதியில் பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தலளவைக் கருவிகளையும் சரிபார்த்து முத்திரையிடும் செயற்பாடு இன்று முதல் 27ஆம் திகதிவரை வாடியடி வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

நிறுத்தலளவைக்கருவிகளைப் பயன்படுத்தும் அனைவரும் குறித்தநாளில் அவற்றை முத்திரையிட்டுக்கொள்ளுமாறு நிறுத்தலளவைப் பிரிவு வருவாய்ப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

### சுனாமியால் பாதிப்புற்றோருக்கான

# தேசிய அடையாள அட்டைகள் ஒருதொகுதி வந்துள்ளன

(அலுவலக செய்தியாளர்)

ஆட்பதிவுத் திணைக்களத்தினால் அண்மையில் நடாத்தப்பெற்ற இடம்பெயர் சேவையின்போது தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களின் ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

மாவட்ட அரச செயலகத்திற்கு முதற்கட்டமாக வந்து சேர்ந்துள்ள 3831 தேசிய அடையாள அட்டைகள் தரம்பிரிக்கப்பட்டு அந்தந்தப் பிரதேச செயலகங்களினூடாக கிராம சேவை அலுவலர்களிடம் கையளிக்கப் பட்டு உரியவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்தும் வெகுவிரைவில் மிகுதி அடையாள அட்டைகளையும் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார். (சோ)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் பல்கலை மாணவருக்கு உதவி

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் பல்கலைக்கழக மாணவருக்கு உதவித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

பல்கலைக்கழக மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்ட ஒரு திட்டமாக "மலரவன் நம்பிக்கை நிதியம்" 1998ம் ஆண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இத்திட்டமானது எதிர்காலத்தில் அறிவு, ஆற்றல்மிக்க ஆரோக்கியமான சமூகமொன்றைக் கட்டியெழுப்ப உதவுமெனத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நம்புகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாணவருக்கும் மாதமொன்றுக்கு ரூபா 2000 வீதம் வழங்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மலையகம் போன்ற பகுதிகளில் வாழும் மாணவர்களுக்கு குடும்பநிதிநிலைமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு நிதி வழங்கப்பட்டுவருகின்றது.

2005ம் ஆண்டுக்கான கொடுப்பனவாக இதுவரை சுமார் 29 மாணவருக்கு மொத்தம் ரூபா 232,000 வழங்கப்பட்டுள்ளது.

நிதி உதவிகேட்டு வந்துள்ள மொத்த விண்ணப்பங்களோடு ஒப்பிடும்போது, இதுவரை நிதியுதவி வழங்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பமே, எனினும் மலரவன் நம்பிக்கை நிதியத்தில் நிதிவளம் கூடும் பட்சத்தில் விண்ணப்பித்துள்ள சகல மாணவருக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உதவி வழங்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. (கு)

# பிரிட்டிஷ் நிதியுதவியுடன் மன்னாரில் தற்காலிக பாலம்

மன்னார் நகரத்தில் தற்காலிக பாலம் ஒன்றை அமைப்பதற்கு பிரிட்டிஷ் அரசு நிதியுதவி வழங்கியுள்ளது.

இப்பாலத்தினது ஆரம்பவேலைகள் தற்போது மன்னாரில் நடைபெற்று வருகின்றது. தற்சமயம் இயங்கும் பாலம் ஏற்கனவே பழுதுபட்டு எவ்வேளையிலும் சேதமடையலாம் என்பதனைக் கருத்திற் கொண்டு இப்பாலத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கென பிரிட்டிஷ் அரசு இருபத்தைந்து மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (18)

# பாடசாலை அதிபரிடம் தங்கச்சங்கிலி அபகரிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா நகரில் இருந்து மாமடு வீதி ஊடாக அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்திற்குச் சென்றுகொண்டிருந்த பாடசாலையின் அதிபரை வழிமறித்த சிங்கள இளைஞர் ஒருவர் அவரின் மூன்றுபவுண் தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு தலை மறைவாகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்தனர். (10)

# தமிழ் மொழித்திறன் போட்டிகள்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தெற்கு கல்விவலய மட்ட தமிழ்மொழித்திறன் போட்டிகள் எதிர் வரும் 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இப்போட்டிகள் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், சீ.சீ.ரி.எம் பாடசாலை ஆகியவற்றில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (10)

# திருக்குறள் தமிழ் இலக்கியத்திறன் தேர்வு கிளி.பாடசாலைகளில் நடைபெற ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

திருக்குறள் தமிழ் இலக்கியத்திறன் தேர்வு எதிர்வரும் 22ஆம் திகதியன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சிமாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் பெரியகுளம் ஐயனார் பாடசாலை, கல வெட்டித்திடல் நாகேஸ்வரா பாடசாலை தர்மபுரம் இல1 பாடசாலை மாணவர்களுக்கான தேர்வுகளும், பரந்தன் இந்துக் கல்லூரியில் அக் கல்லூரி மாணவர்களுக்கும் மற்றும் பரந்தன் அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கான தேர்வுகளும், கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் மகாவித்தியாலய மாணவர்களிற்கும் மற்றும் கனகபுரம் மகாவித்தியாலய மாணவர்களிற்கும் இடம்பெறவுள்ளது. ஏனைய மாணவர்களுக்கும் அந்தந்தப் பாடசாலைகளிலும் மேற்படி தேர்வுகள் இடம்பெறவுள்ளது. இதற்கான அனுமதி அட்டைகள் அந்தந்தப்பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதெனவும் தமிழ்ச்சங்கச் செயலர் பரமநாதபிள்ளை தெரிவித்துள்ளார்.(சோ)

# சொக்கலிங்கம் சிறுவர் பூங்காவின் மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி

(முழங்காவில்)

சொக்கலிங்கம் சிறுவர் பூங்காவின் மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி கடந்த திங்களன்று சிறப்பாக நடைபெற்றது.



முழங்காவில் இரணைமாதா நகரில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையோடு ஊரக வளர்ச்சிப் பணியினரால் நிர்வகிக்கப் பட்டுவரும் இச்சிறுவர் பூங்காவின் சிறுவர்களுக்கிடையிலான திறனாய்வுப்போட்டி கடந்த திங்கள் மாலை 2.30 மணிக்கு பூங்கா நிர்வாகியின் தலைமையில் ஆரம்பமானது.

கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரும், முழங்காவில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளரும் மங்கல விளக்கினை ஏற்றி வைக்க, தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் [illegible]ழத் தேசியக்கொடியினை ஏற்றி[illegible]நத் தொடர்ந்து மாவீரர் சுவீந்திர[illegible]ன் திருவுருவப்படத்திற்கு அவரது தாயார் சுடரேற்றி மலர் மாலையினை அணிவித்ததையடுத்து தமிழர் புனர்வாழ்வுக்கழகக்கொடி, சிறுவர் கல்விஊட்டமேம்பாட்டுக் கொடி, கல்வி மேம்பாட்டுக்கொடி மற்றும் பூங்காக் கொடியும் ஏற்றப்பட்டது.

தொடர்ந்து வரவேற்புரையினையடுத்து அரசியல்துறை துணைப் பொறுப்பாளரின் ஆசியுரையுடன் சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. சிறார்களின் பல்வேறு விளையாட்டுக்களுடன் இசையும், அசைவும் நிகழ்வும் சிறப்புநிகழ்வாக இடம்பெற்றதைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வில் வெற்றியீட்டிய சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

# தீர்த்தம் எடுத்தல் நிகழ்வு

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் தினத்தின் இரண்டாம் நிகழ்வான தீர்த்தம் எடுத்தல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. சிலாவத்தை, கள்ளப்பாடு கடலில் கடல் நீர் எடுத்துவரப்பட்டு [illegible]டாவிநாயகர் ஆலயத்தில் வைக்கப்பட்டு கடல் நீரில் விளக் கேற்றப்பட்டது. (20)



முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள தற்காலிக குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள முன்பள்ளியில் வேள்விஷன் நிறுவனத்தினால் அமைத்துக்கொடுக்கப்பட்ட சிறுவர் விளையாட்டு மைதானத்தைக் கையளித்து சிறுமி ஒருவரை வேள்விஷன் நிறுவன இயக்குனர் லீ ஊஞ்சல் ஆட்டுவதைப் படத்தில் காணலாம். (20)

# வீடுகளை விட்டு படையினர் வெளியேறும் வரை தென்மராட்சியில் போராட்டம் நடத்த ஏற்பாடு

(தென்மராட்சி)

**சமாதான காலத்திலும் அவல வாழ்வு வாழமுடியாது. வீடுகளை விட்டு படையினர் வெளியேறும் வரை போராட்டம் தொடரும் என தென்மராட்சி இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம் தெரிவித்துள்ளது.**

உயர்பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியேற்றம் தொடர்பான விசேட கூட்டம் வரும் 24 ஆம் திகதி மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மிருசுவில் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக இன்றுவரை அல்லலுற்று வாழும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு வீடுகளை படையினிடம் இருந்து மீட்டெடுக்க அணி திரளவுள்ளன.

வரும் 24 ஆம் திகதிக்கு பின்னர் தொடர் போராட்டத்தையும் சாலை மறியல்களையும், சுழற்சிமுறை உண்ணாவிரதங்களையும் படை முகாம்களாக மாற்றப்பட்ட வீடுகளின் முன்னாலேயே நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (28)

# 'ரோபோ' தொழில்நுட்பம் விரைவில் அறிமுகமாகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு தொழில்நுட்பத் துறையில் "ரோபோ" தொழில்நுட்பம் விரைவில் அறிமுகப்படுத்தப்பட விருப்பதாக யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரி முதல்வர் என்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

இந்த "ரோபோ" தொழில்நுட்பத்தை யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியூடாக அறிமுகம் செய்து வைக்க கொரிய அரசு சகலவிதமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக அலுவலகநடவடிக்கைகள், கட்டடநிர்மாண வேலைகள், மின்சார வேலைகள், இரும்பு வேலைகள் போன்றவற்றில் "ரோபோ"க்களைப் பயன்படுத்தும் முறைகள் முதலில் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வந்தாலும் 2007 ஆம் ஆண்டு இவ் "ரோபோ" தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வேலைகளைச் செய்யும் திட்டம் முற்றுமுழுதாக நடைமுறைக்கு வருமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (33)

# சுனாமியால் 6811 குடும்பங்கள் குடாநாட்டில் நேரடிப் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரனர்த்தம் காரணமாக யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த 6811 குடும்பங்கள் நேரடியான பொருளாதாரப் பாதிப்புக்களை எதிர்கொண்டிருப்பதாக சுனாமி அனர்த்த நிவாரண ஒருங்கிணைப்பு செயலணி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு நேரடியான பொருளாதாரப் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள குடும்பங்களில் அதிகளவானவை கடற்றொழிலாளர்களின் குடும்பங்களாக இருப்பதாகவும் தெரியவருகிறது.

எனவே இவ்வாறு பொருளாதாரப் பாதிப்புக்களை நேரடியாகச் சந்தித்துள்ள 6811 குடும்பங்களினதும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உடன் எடுக்கப்படுவது அவசியமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதை விட 15000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மறைமுகமான பொருளாதாரப் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதாகவும் மேலும் சுட்டிக் காட்டப்படுகிறது. (33)

# அனுமதியட்டை நடைமுறையைக் கண்டித்து கடற்றொழிலாளர் அவசர கலந்துரையாடல்

கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு கடற்றொழிலாளர்கள் இராணுவத்தினரிடம் அனுமதி அட்டை எடுப்பதைக் கண்டித்து அண்மையில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் அவசர கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி வடக்கு சமாசசெயலர் க.சூரியமாரன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் வடமராட்சிப் பகுதி கடற்றொழிலாளர்கள், சமாச பிரதிநிதிகள் கூடி தீர்மானங்களை நிறைவேற்றினர்.

எமது தீர்மானங்களை நாமே மேற்கொள்ளும் திடம் கொண்டவர்கள் எனவே நாங்கள் தீர்மானங்களை எடுக்கின்றோம்.

எமது கடலில் நாம் தொழில் செய்ய பாஸ் எடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் தொடரும் என்றால் எமது பிரதேசத்தில் அத்து மீறி காவலரண் அமைத்து குடியிருக்கும் இராணுவத்திற்கான அனைத்து தேவைகட்கும் எம்மிடம் பாஸ் எடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அவர்களுக்கும் உணவு வழங்குவதற்கும், குடிநீர் வழங்குவதற்கும் ஏன் குடியிருப்பதற்கும் சேர்த்துத்தான் சொல்கிறோம். சொல்லவில்லை எச்சரிக்கின்றோம் என அவர்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். (கா)

# பூச்சிநாசினிகளின் பயன்பாட்டை குறைத்துக்கொள்ள வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு விவசாயிகள் இரசாயனப் பூச்சிநாசினிகளின் பயன்பாட்டைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென யாழ்.மாவட்ட விவசாய ஆராய்ச்சித்திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குடாநாட்டு விவசாயிகள் இரசாயனப் பூச்சிநாசினிகளை அதிகமாகவும், தொடர்ச்சியாகவும் பயன்படுத்தி வருவதால் சுற்றுச்சூழல் மாசடைவது மட்டுமன்றி சில பூச்சிகள், பூச்சி நாசினிகளின் நச்சுத்தன்மையை எதிர்த்து வாழக்கூடிய "நிர்ப்பீடன இயல்பைப் பெற்று வருகின்றன.

இவ்வாறு "நிர்ப்பீடன" இயல்பைப் பெறும் பூச்சி இனங்களை அழிப்பது மிகவும் கடினமானது என கடந்தகால ஆராய்ச்சிகள் மூலம் உணரப்பட்டுள்ளமையை மேற்கோள்காட்டி குடாநாட்டு விவசாயிகளிடம் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ள யாழ். மாவட்ட விவசாய ஆராய்ச்சித் திணைக்களம் பூச்சி நாசினிகளுக்குப் "பதிலாக வேம்புவிதைச்சாறு" "உள்ளிக்கரைசல்" என்பவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் பூச்சி நாசினிகளால் கட்டுப்படுத்த முடியாத பூச்சிகளையும் கட்டுப்படுத்தலாம் என ஆராய்ச்சி பூர்வமாக அறிவித்துள்ளது. (33)

# குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கையெடுக்கக் கோரிக்கை

மண்டைதீவில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபையால் வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே நடத்தப்படும் நீர்விநியோகத்தை மேலும் சில நாடகளுக்கு நீடிப்பதுடன் மக்களின் தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதிக்கான கிராம அலுவலரும் பொதுமக்களும் கூட்டாகக் கோரியுள்ளனர். கடந்த காலத்தில் சமூக சேவைத் திணைக்களத்தில் இருந்து குடிநீர் விநியோகத்திற்கு எந்தவித உதவியும் இப்பிரதேசத்திற்குக் கிடைக்காமையால் கடந்த ஆண்டில் தனியார் நிறுவனம் மூலமே இப்பகுதிக்கு நீர் விநியோகம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (28)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

சுனாமியால் பாதிக்கப்பட்டு ஊனமுற்றுள்ளவர்களுக்காக ஜேர்மனைச் சேர்ந்த ரேராரெக் எனும் அமைப்பு சக்கர நாற்காலிகளை வழங்கியுள்ளது.

மேற்படி நாற்காலிகள் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜேர்மன் ரேராரெக் பிரதிநிதி அரிர் அகமட் என்பவருடன் கொழும்பு நுகேகொடவைச் சேர்ந்த சிலாடா எஸ்.எல்.ஏ.எச்.டீ ஏ என்ற அமைப்பைச் சேர்ந்த அனுர கமாம்பிள்ளை, கொட்வின், இமானுவல் ஆகியோர் கொண்ட குழுவொன்று நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு சக்கர நாற்காலிகளை யாழ்.மாவட்ட மேலதிக அரசஅதிபர் சிவசுவாமி அவர்களிடம் கையளித்தது. (சு)

# உணவகங்களின் சுகாதாரத்தை கண்காணிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள உணவகங்களின் சுகாதார நிலைமைகளை இறுக்கமான முறையில் கண்காணிக்குமாறு பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் சகல சுகாதார பரிசோதகர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

சுகாதார விதிமுறைகளை சரிவரப் பின்பற்றாத உணவகங்களை மூடி அவற்றுக்கெதிரான சட்டநடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள உணவகங்களில் நிலவும் சுகாதார சீர்கேடுகளே இங்கு நோய்த்தாக்கங்கள் அதிகரித்து வருகின்றமைக்கு காரணம் என்பதைச் சுட்டிக்காட்டியே மேற்படி உத்தரவுகளை விதித்துள்ள பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உணவகங்களை மூடுவதற்கு பிரதேசசபைகளது ஒத்துழைப்புக்களை பெறுமாறும் அறிவித்துள்ளார். (33)

# வெளிவாரி மாணவர் பிரச்சினையைத் தீர்க்க உதவி வழங்கத் தயாராக உள்ளேன்!

## -கலைப்பீடாதிபதி சிவச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்களைத் தொடரும் மாணவர்களுக்குள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான உதவிகளை வழங்க எந்தநேரமும் தயாராக இருப்பதாக யாழ்.பல் கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகப் பயின்றுவரும் மாணவர்களுக்கு உரிய காலத்தில் கலைமாணி தேர்வுகள் நடத்தப்படுவதில்லை. இதனால் மூன்று தேர்வு ஆண்டுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகம் தமக்கான தேர்வுகளை நடத்தும் எனக் காத்திருக்கின்றனர்.

இந்நிலைமைகள் காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவுவதற்குத் தான் எந்நேரமும் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ள கலைப் பீடாதிபதி பேராசிரியர் சிவச்சந்திரன் மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து பாதிக்கப்பட்ட மாணவர்களுடன் பேசவும் தான் ஆவலாக இருப்பதாகவும் தெரிவித்தார். (33)

# யாழில் படையினரின் ஆக்கிரமிப்பால் நெல் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் 1995 ஆம் ஆண்டுக்குப் பின்பு படையினரின் ஆக்கிரமிப்பால் நெல் உற்பத்தி பாரிய வீழ்ச்சி கண்டிருப்பதாக யாழ்.மாவட்ட விவசாயத்திணைக்கள அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.குடாநாட்டில் உள்ள விளை நிலங்கள் பலவும் 1995 ஆம் ஆண்டுக்குப் பின் இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினால் முடக்கி வைக்கப்பட்டிருப்பதன்காரணமாகவும் இராணுவ அதி உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே பல விளை நிலங்களில் படையினர் கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்திருப்பதனாலும் இவற்றில் நெற்செய்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைமையுள்ளது.

இதன் காரணமாகவே குடாநாட்டில் நெற்செய்கை உற்பத்தி பாரிய வீழ்ச்சி கண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் இதன் தாக்கம் தென்மராட்சி மற்றும் வலிகாமம் ஆகிய பகுதிகளில் அதிகமுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (33)

# வருடாந்த மலருக்கு ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழு வருடாவருடம் நல்லைக்குமரன் என்ற பெயரில் வெளியிடும் மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

வருடாந்த உற்சவத்திற்கான 13 ஆவது மலர் இவ்வருடம் வெளியிடப் படவுள்ளது. மேற்படி மலருக்கு உகந்ததும், காலத்தின் தேவைக்கு ஏற்றதுமான தலைப்பில் தரம் மிக்க ஆக்கங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு துறை சார்ந்த அறிஞர்கள், சைவப்பெரியோர்கள் மற்றும் கல்விமான்களிடம் மாநகர ஆணையாளர் கோரியுள்ளார். இம்முறை நல்லைக்குமரன் மலருக்கான பிரதான தொனிப்பொருள் "மாநகராட்சிமன்ற பிரதேசத் திருக் கோயில்கள்" என்பதாகும்.

# நோய் பரவல் தடுப்பு முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நோயாளர் பெருக்கத்தைக் குறைக்க முடியும்

ஒரு மனிதன் பிறந்து வளர்ந்து இறந்து போகின்ற காலப்பகுதியில் அம்மனிதனுடைய வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகளில் நோயும் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஏதோ ஒரு சூழ்நிலையில ஏதோ ஒரு விதமான நோய்க்கு ஆளாகாமல் எந்த ஒரு மனிதனும் வாழ்வது என்பது கடினம். நிச்சயம் ஏதோ ஒரு நோய்க்கு மனிதன் அகப்பட்டுப் பின்னர் அதிலிருந்து விடுபடுகிறான், அதே நோயால் இறந்து போகின்ற சந்தர்ப்பமும் உண்டு.

இவ்வாறு மனித வாழ்வோடு ஒன்றிணைந்து இருக்கின்ற நோய்கள் பலவகைப்பட்டவை உள்ளன. ஆதிகாலம் தொடக்கம் இன்று வரை தொடரும் நோய்களும் இன்றைய போராட்ட சூழ்நிலைகளாலும், இயற்கை அனர்த்தங்களாலும் ஏற்படுகின்ற புதுவிதமான நோய்களும் அதிகமாகப் பரவிவருகின்றன.

இன்றைய சூழ்நிலையில் எமது பகுதிகளில் அதிகமாகக் காணப்படும் நோய் வைரஸ் காய்ச்சல் எனப்படும் ஒரு வித காய்ச்சல். இது அண்மை நாட்களாக அதிகமான மக்களைத் தாக்கியுள்ளது. இதனால் ஒவ்வொரு வைத்தியசாலையிலும் சிகிச்சை பெறும் நோயாளர்கள் தொகையும் அதிகமாக உள்ளதைக் காணமுடிகின்றது.

இந்த நிலைமையை அடிப்படையாகக் கொண்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அந்நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் நோயாளர்கள் தொகையையும் மற்றும் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் நீண்டநாட்களாக மக்கள் அதிகரித்து இருப்பதற்குரிய காரணங்கள் பற்றியும் புதுவிதமான காய்ச்சல் பற்றிய விளக்கங்களையும் மேலும் பல விடயங்களையும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைத்திய கலாநிதி யூடிரமேஸ்குமார் அவர்களிடம் சென்று கேட்ட போது அவர் அவை அனைத்திற்கும் பூரணமான ஒரு விளக்கத்தை தந்துள்ளார். அவற்றை இங்கு தருகின்றோம்.

**கேள்வி:-**

**கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நீண்டநாட்களாக வெளிநோயாளர் பிரிவில் அதிகளவான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதற்குரிய காரணம் என்னவென்று கூறுங்கள்?**

பதில்:-உண்மையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தற்போது வெளிநோயாளர் பிரிவில் தினமும் அதிகளவானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சில நேரங்களில் குறைந்தது 700 தொடக்கம் 800 வரையான நோயாளர்கள் சிகிச்சைக்கு வருகின்றனர்.

வெளிநோயாளர் பிரிவு எனும் போது அங்கு நாளாந்த நோய்களிற்கும், நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சை பெறுவதற்காக வருவார்கள். அதனால் அவர்களுக்குரிய நோய்களை இனங்கண்டு அதற்கேற்ற வகையில் சிகிச்சையளிக்கப்படுகிறது.

அவ்வாறு சிகிச்சையளிப்பதற்கு நோயாளர்கள் கூறுகின்ற நோய்களுக்குரிய அறிகுறிகள், காரணங்களுடன் நாங்கள் மேற்கொள்கின்ற மருத்துவப் பரிசோதனைகள், இரத்தப் பரிசோதனைகளின் மூலமும் தான் நோயைப்பற்றி கண்டறிவதற்கு முடியும்.

ஆனால் இப்போது அதிகரித்து வருகின்ற நோயாளர்களுக்கு ஏற்ற விதமாக நாங்கள் பரிசோதனைகள் மூலமாக நோயைக் கண்டு பிடித்து அதற்குரிய சிகிச்சையளித்து மருந்து கொடுப்பது கடினமான விடயம். பொதுவாக தற்போது நோயாளர்கள் அதிகரித்திருப்பதற்குரிய காரணம் தற்போது எமது பகுதிகளில் பரவிவருகின்ற சுவாசத் தொற்று நோய் அதாவது இருமல், சளி, அதனால் ஏற்படுகின்ற காய்ச்சல் இதனால் பீடிக்கப்பட்டுத்தான் கிட்டதட்ட 60 வீதத்திற்கும் மேலான மக்கள் வருகின்றார்கள்.

இன்றைய சூழ்நிலையில் இந்தக் காய்ச்சல் கூடுதலாக ஏற்படுவதற்குரிய ஏதுவான காரணி "வைரஸ்" கிருமி இதனால் தான் இந்நோய் பரவுகின்றது. இந்த வைரஸ் கிருமிகளால் ஏற்படுகின்ற நோய்களுக்கு பொதுவாக மருத்துவ சிகிச்சை இல்லை. அவை உடலில் ஏற்படுத்தப்படுகின்ற நோய் எதிர்ப்பு சக்தி மூலந்தான் குணமாகின்றன.

அவ்வாறாக குணமடைகின்ற நோயாளர்கள் ஒரு சில நாட்களில் அந்த நோய் அறிகுறிகளில் இருந்து விடுபட்டு குணமாகலாம். சில பேர் அதற்கு மேலாக பற்றீரியா தொற்று ஏற்படும் போது இருமல், சளி பளுத்த நிலையிலும் வருவார்கள். இப்போது நோயாளர்கள் அதிகரித்து வருவதற்குரிய காரணம் வைரசால் ஏற்படுகின்ற காய்ச்சல். இது மிகவிரைவாக மிக தீவிரமாக பரவும்.

ஏனென்றால் அது எமது உடலில் உள்ள சளி மற்றும் எச்சில் மூலமாகப் பரவும். ஒருவருக்கு இருமல் என்றால் அவர் தன்னிடமுள்ள கிருமிகளை மிக விரைவாக மற்றவர்களுக்குக் கொடுத்து விடுவார். இது ஒரு ஆளுக்கு மட்டுமல்ல அதிகளவானோருக்கு பரவிவிடும். அதனால் இந்தக் காய்ச்சல் மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்டது. ஆகவே தான் கூடுதலானோர் ஒரே நேரத்தில் பாதிக் கப்படுகின்றார்கள்.

மற்றக் காய்ச்சல்கள் எனும் போது மலேரியா, நெருப்புக் காய்ச்சல், சலத்தில் கிருமிகள் தொற்று இவற்றின் போதும் காய்ச்சல் வரும். புண்கள் ஏற்படும் போது காய்ச்சல் வரும். இப்படி நிறைய காரணங்களால் காய்ச்சல் ஏற்படும்.

தற்போது அதிகமாகப் பரவுகின்ற வைரஸ் காய்ச்சலினுடைய அறிகுறிகளைப் பார்த்தால் ஆரம்பத்தில் மெல்லிய காய்ச்சலுடன் தொடங்கி பின்னர் உடம்பு நோ, குத்துவலி, உளைவு, சில பேருக்கு வாந்திபேதி எல்லாம் ஏற்பட்டு நோயாளிக்கு நீராகாரம் எடுக்காத அளவிற்கு அவரை கடினப்படுத்தும். அந்த நேரத்தில் இருமல், சளி தொடங்கும். ஆரம்பத்தில் சளி வெள்ளையாகவரும். பின்னர் இந்த சளி பற்றீரியா தொற்றுக்கு ஆளாகும் போது மஞ்சள் நிறமாக வரும்.

தற்போது கூடுதலாக நோயாளர்களுக்கு தொண்டை நோவு உள்ளது. உடம்பு அடித்துப் போட்ட மாதிரி நோகிறது அலுப்பாக இருக்கிறது. கைகால் அசதியாக இருக்கிறது. நடக்க முடியாதுள்ளது. இவைதான் இந்த வைரஸ் காய்ச்சலின் அறிகுறிகள். ஆனால் நாங்கள் மருத்துவ முறையில் இந்த நோய்க்கு சிகிச்சையளிக்கின்ற போது நோவுகளிற்கு மருந்துகளை கொடுத்துக் கொண்டு நோயாளர்களை போதியளவு ஓய்வு எடுத்து நீராகாரங்களைத் தேவையான அளவு எடுத்து வரவேண்டும் என்று கூறுகின்றோம். இதன் மூலம் இதனை குணப்படுத்தலாம். வைரஸ் வந்து உடம்பால் எதிர்க்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டுவிடும். ஆனால் உடம்பு நோவு கைகால் உளைவுக்கு இந்த மாத்திரைகள் உதவும்.

இன்று வரைக்கும் அதிகளவானோர் இந்த வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வருகின்ற போதும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு வருபவர்களை எமது மாவட்டத்தில் நாங்கள் இனம் காணவில்லை. யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் பரவி வருவதாக கூறுகிறார்கள். ஆனால் நாங்கள் இதுவரையும் டெங்கு நோயாளர் ஒருவரையும் இனங்காணவில்லை. காலப்போக்கில் இதை எதிர்பார்க்கலாம்.

ஆகவே நாங்கள் கூடுதலாக கூறக் கூடியது நோய் பரவுவதை தடுப்பதற்குரிய முறைகளைக் கையாள வேண்டுமென்பதே. இருமல், சளி இவற்றால் பாதிக்கப்பட்டு தும்மல், இருமல் இருக்கின்றபோது அவர் தும்முகின்ற போது அவற்றிலிருக்கின்ற கிருமிகள் மற்றவர்களுக்கு பரவாமல் இருப்பதற்குரிய தடுப்பு முறைகளை செய்ய வேண்டும். இப்படி ஒவ்வொருவரும் செய்வார்களாக இருந்தால் இந்த நோய் மற்றவர்களுக்கு ஏற்படுவதைத் தடுக்கலாம். குறிப்பாக தனிநபர் சுகாதாரத்தைப் பேணுவோமாக இருந்தால் இதை நாங்கள் தடுக்கலாம்.

இருந்த போதும் இந்தக் காய்ச்சல் குறைந்து கொண்டு போவதை நாங்கள் அவதானிக்கின்றோம். கூடுதலாக மக்கள் நிறைவு காண்பதில்லை மருந்தை எடுத்தவுடன் காய்ச்சல் மாற வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அதைவிட முதலில் எடுக்கின்ற வைத்தியசாலையின் மருந்துக்கு குறையவில்லை என்றால் பெரிய வைத்தியசாலைக்கு வருவார்கள் அங்கும் குறையவில்லை என்றால் தனியார் மருத்துவமனைக்குச் செல்வார்கள். இப்படி ஒரேஆக்கள்தான் மாறி மாறி வருகிறார்கள். இதைவிட கொடுக்கப்படும் மாத்திரைகளை ஒழுங்காகக் குடிக்காமல் விடுவது போன்ற காரணங்களாலும் இந்த வைரஸ் காய்ச்சல் பீடிக்கப்பட்ட நோயாளர்கள் அதிகம் இருக்கின்றார்கள்.

**கேள்வி:-**

**இந்த வைரஸ் காய்ச்சல் தவிர வேறு என்ன நோய்களுக்காக இங்கு அதிகளவான நோயாளர்கள் வருகின்றார்கள்?**

பதில்:- நல்லதொரு கேள்வி வெளிநோயாளர் பிரிவில் நான் கூறியது போல் இவ்வாறாக வைரஸ் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் வருகின்றார்கள், இன்னுமொரு பகுதியினர் நாய், பூனை, போன்ற மிருகங்களினுடைய கடிகளுக்குள்ளாகி வருகின்றனர். கூடுதலாக தெரு நாய்க்கடியும் இப்பொழுது அதிகரித்துக் காணப்படுகின்றது.

தினமும் குறைந்தது ஐந்து பேராவது தெரு நாய் என்று அதாவது விசர்நாய் என்று சந்தேகிக்கப்படுகின்ற நாய்களால் கடிபட்டு வருகிறார்கள் இதனாலும் எங்களுக்கு பாரிய பிரச்சினையுள்ளது. இதுவரைக்கும் தெருநாய்கள் அழிக்கப்படவில்லை. அதனுடைய தொல்லை அதிகரித்தே காணப்படுகின்றது.

இந்த விசர் நாய் கடிக்கு நாங்கள் அணுகும் முறை வித்தியாசமானது. ஏனென்றால் விசர் நாய் கடித்து விசர் நோய் ஏற்படுமாக இருந்தால் 100 வீதம் மரணம்தான் ஆகவே அந்த நோயாளி மூலம் நாயைப்பற்றி அறிய வேண்டிய தேவை உள்ளது. அது வளர்ப்பு நாயா, தெருநாயா, வேறு யாருக்கும் அது கடித்துள்ளதா இப்ப நாய் இறந்து விட்டதா என்று பல கேள்விகளைக் கேட்டு விசர் நாய்தானா என்று உறுதிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

மாறாக அனாவசியமாக அந்த நோயாளியைத் தவற விடும் போது அவர் அந்த நோயால் மரணமடைய வேண்டிய நிலையும் ஏற்படும். இது போல் வெளிநோயாளர் பிரிவில் சிறுகாயங்கள், விபத்துக்களை சந்தித்து வருபவர்கள் கூடுதலாக ஏற்பு ஊசி, புண்கள் போன்றவற்றிற்கு சிகிச்சை பெற வருகிறார்கள்.

இன்னுமொரு பகுதியினர் உடல் நோ என்று வருவார்கள் . உடல் நோ என்றால் உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரையும் நோ என்று கூறுவார்கள். தலை இடி என்பார்கள், காதுக் குத்து என்பார்கள், கண்ணால் கண்ணீர் வடிகிறது என்பார்கள், வயிற்றுக்குத்து என்பார்கள், கைகால் மூட்டுகளுக்குள் நோகிறது என்பார்கள்,

இவர்களை நாங்கள் நன்கு அணுகி பரிசோதித்துப் பார்க்கின்றபோது அவர்கள் ஏதோ ஒரு உளவியல் ரீதியான தாக்கத்தை கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள், நீண்டகாலப் போர் காரணமாக பாதிக்கப்பட்ட தாக்கங்களால் அதனை நேரடியாக வெளிக்காட்டாமல் இப்படியான உடம்புடன் தொடர்பான உளைவு, குத்து, நோ போன்றவற்றை கூறுகின்றார்கள்.

உண்மையில் அவர்களை நாங்கள் ஆளமாகப் பார்த்தால் ஏதோ ஒரு காலப்பகுதியில் உள ரீதியான தாக்கத்திற்குள்ளாக்கப்பட்டு அதிலிருந்து மீளமுடியாதவர்களாக இவ்வாறான நோய்களுடன் வருகிறார்கள் அது உள வெளிப்பாடு. இது உடல் நோயின் வெளிப்பாடாகக் காட்டும்.

இதனால் அவர்களுக்கு நாங்கள் நோவுக்குரிய மருந்துகளையும் வழங்கிக் கொண்டு கூடுதலாக உளவளத்துறை ஆலோசனைகளை வழங்குவதற்காக அன்னை இல்லத்தை நாட அவர்களை அனுப்புகின்றோம் அப்படியொரு தொகுதியினர் வருகின்றனர்.

இன்னுமொரு பகுதி உண்மையில் நான் சொல்லிய நாளாந்தப் பிரச்சினையை விட நாட்பட்ட பிரச்சினையை பார்த்தால் உயர் குருதி அமுக்கம், சலரோகம், ஆஸ்மா வருத்தம் நாட்பட்ட சிறுநீரககோளாறுகள் இவர்களும் வெளிநோயாளர் பிரிவுக்குத்தான் வருவார்கள்.

இங்கு உண்மையில் உடனடியாக கவனிக்கப்பட வேண்டியவர்கள் அவர்கள் தான் ஆனால் வேலைப் பளுவினால் அவர்கள் தவறவிடப்படலாம் ஏனென்றால் எல்லோரும் ஓரே வித மாக கதைப்பதால் நோயாளி யார் என்பது இனங்காணுவது கடினம் அவ்வாறு இருந்தும் அவர்களை இனம் கண்டு அவர்களுக்கு உடனடியாக செய்யவேண்டிய சிகிச்சைகளை மேற்கொண்டு பின்னர் கிளினிக்கிற்கு வரக்கூடிய ஒழுங்குகளை செய்து அனுப்புகின்றோம்.

சில நோயாளர்களை விடுதியில் தங்க வைத்து சிகிச்சை அளிக்கவேண்டி வரும் அது நாட்பட்ட நோய்களாக இருக்கலாம். விபத்து பாம்புக்கடி போன்றவையாக இருக்கலாம் தற்கொலை முயற்சிகளாக இருக்கலாம் குழந்தைப் பேறாக இருக்கலாம். சிறுவர்கள் சம்பந்தப்பட்ட நோய்களாக இருக்கலாம் அந்த ஒரு பகுதியினர் அவ்வாறு சிகிச்சை பெற ஒழுங்கு படுத்தப்படுவார்கள்.

முக்கியமாக வெளிநோயாளர் பிரிவில் அதிகரித்த மக்கள் காணப்பட இன்னுமொரு முக்கிய காரணம் என்னவென்றால் ஒரு பிள்ளைக்கு வருத்தம் என்றால் தாய் வரும் போது எல்லாப்பிள்ளைகளையும் அழைத்து வருவார்கள். இதனால் யாருக்கு வருத்தம் என்பதை இனம் காணமுடியாது போய்விடும். பிள்ளைகள் ஒரு திக்கிலும் தாய் ஒரு திக்குமாக நிற்கும் போது யாருக்கு வருத்தம் என்று அறியமுடியாது போக குடும்பம் குடும்பமாக வரும் வேளை வெளிநோயாளர் பிரிவிலும் அதிகரித்த சனத் தொகை தான் காணப்படும்.

இவற்றைக் குறைப்பதற்காக நாங்கள் கூடியளவு நோய்த்தடுப்பு முறைகளை கூறிவருகின்றோம். இதற்காக எமது மாகாண சுகாதார சேவைகள் பணிமனையினால் இது தொடர்பான கருத்துக்களை வழங்க ஒரு ஆலோசகரும் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் நிறைய விளக்கங்களைக் கொடுத்து முன்னச்சரிக்கையாக செயற்படக்கூடிய வழிமுறைகளையும் வழங்கவுள்ளோம்.

இதுபோன்று இரத்தச்சோகையால் பாதிக்கப்பட்டு வருபவர்களும் கூடுதலாக உள்ளனர் என்று தான் கூறமுடியும்.



வைத்திய கலாநிதி யூடிரமேஸ்குமார்

**கேள்வி:-**

**இப்படி அதிகரித்த நோயாளர்கள் வருகின்றபோது அவர்களை பார்வையிடக் கூடிய வைத்தியர்கள் போதியளவு இன்மையால் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது அது பற்றி?**

பதில்:-உண்மையில் வைத்தியசாலைக்கேற்ப வைத்தியர்கள் தொகையும் குறைவாகத் தான் காணப்படுகின்றது. ஏனென்றால் கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் கடைசியாக கிடைத்த புள்ளிவிபரங்களின் படி ஒரு லட்சத்து முப்பத்தி இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர்.

இவர்களுக்குரிய பெரிய வைத்தியசாலை என்றால் இது தான் இங்கு மாவட்டத்தின் ஏனைய சிறிய வைத்தியசாலைகளிலிருந்து ஒரு நாளைக்கு பத்து அம்புலன்ஸ் வண்டிகளில் நோயாளர்கள் வருவார்கள் அவர்களும் வெளிநோயாளர் பிரிவின் ஊடாகத்தான் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகிறார்கள் இவ்வாறு அதிகரித்த நோயாளர்களின் வருகைக்கேற்ப ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவது என்பது உண்மை தான் இதனை நிவர்த்தி செய்து தரவேண்டியது அரசின் கடமை அதுவரையும் நீண்ட நெருக்கடிகளை சந்தித்துத்தான் சிகிச்சை பெறவேண்டி வரும் இவ்வாறு நோயாளர்கள் அதிகரிப்பதனால் எமது வைத்தியசாலைக்கு காலாண்டுக்கு ஒரு முறை வருகின்ற மருந்துகள் முடிவடைந்து விட மக்கள் வெளியில் மருந்துகளை வாங்க வேண்டிய நிலையும் ஏற்படும்.

**செவ்வி கண்டவர் த.குகன்**

பொதுவாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிற்கு வைத்தியர்கள் பற்றாக்குறை தான் அதை அரசாங்கம் உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும். அதற்காக சிங்கள வைத்தியர்களை அனுப்புகின்ற போது அவர்கள் உடனடியாக வேறு இடங்களுக்கு தங்களுக்கு வசதியான இடத்திற்கு மாற்றம் எடுத்துச் செல்கிறார்கள்.

இங்கு நிலைத்து நிற்கின்ற வைத்தியர்கள் என்றால் இந்த மண்ணில் பிறந்து இங்கு கல்வி கற்று வந்தவர்கள் தான் நிலையாக உள்ளார்கள்.

இந்த வைத்தியர்கள் பற்றாக்குறையை சுகாதார அமைச்சுத்தான் நிவர்த்தி செய்ய வேண்டும். குறைந்தது சுழற்சி முறையிலாவது வைத்தியர்களை அனுப்புகின்ற போது இங்கு கூடுதலான சேவைகளை செய்து மக்களுக்கு பயன் கிடைக்கச் செய்யலாம் இல்லாவிடில் மக்கள் தான் பெரும் சிரமப்படவேண்டி ஏற்படும்.

# சிறி. சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் யார்?

நாம் அடுத்ததாக சனாதிபதித் தேர்தலைப் பற்றி சிந்திப்போம் 2005ஆம் ஆண்டு இறுதியில் சனாதிபதி ஆட்சிக்காலம் முடியப் போகிறது. இல்லையேல் 2006ஆம் ஆண்டு இறுதியில் முடியும் . இன்னும் இதனைப்பற்றி சரியான முடிவுக்கு சனாதிபதி வரவில்லை




சந்திரிகா

இரண்டாவது முறை ரகசியமாகவும் கள்ளத் தனமாகவும் சனாதிபதி பிரதம நீதியரசர் முன் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். ஆனால் 2005ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தல் நடத்தாவிட்டால் அதற்கெதிர்ப்புத் தெரிவித்து வீதி மறியல் போராட்டம் நடத்தப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க கூறி வருகின்றார். அதற்கு 2006ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என மங்கள சமரவீர பதில் கூறியுள்ளார்.

நாட்கள் கடந்து கொண்டு செல்கிறது. சனாதிபதித் தேர்தல் நடத்தும் நாளை அரசு இதுவரை அறிவிக்கவில்லை. தற்போதைய அரசின் நடவடிக்கைகளை கவனிப்போமானால் 2005ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறுவதற்கு எந்த அறிகுறிகளும் அரசிடமிருந்து தென்படவில்லை. கடைசிவரை ஆட்சிப் பீடத்தில் இருப்பதையே சனாதிபதி விரும்புவார். ஆனால் அதில் அவருக்கு வெற்றியடைய முடியாது. அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கு சந்திரிகா போட்டியிட முடியாது. முறைப்படி சனாதிபதி பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பாளர் நியமனத்தை வழங்க வேண்டும். இதை சனாதிபதி செய்வாரா? இதில் பல சிக்கல்கள் உண்டு.

அடுத்து தற்போதைய அரசாங்கத்தில் அதிக மக்கள் செல்வாக்கை பிரதமர் பெற்றுள்ளார். ஆனபடியால் அடுத்த சனாதிபதி தேர்தலுக்குத் தகுதியானவர் ராஜபக்ஷ. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வுடன் போட்டியிட்டு வெற்றி பெறும் வாய்ப்பு அதிகமாக ராஜபக்ஷவுக்குண்டு. மீண்டும் செல்வாக்குப் பெறவேண்டுமானால் ராஜபக்ஷ சனாதிபதித் தேர்தலில் போட்டியிடவேண்டும். அவருக்கு கட்சியிலும் அதிக செல்வாக்கு உண்டு. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சியில் செல்வாக்கு அதிகம் கிடையாது.

மகிந்த ராஜபக்ஷ சனாதிபதித் தேர்தலில் போட்டியிடாவிட்டால் ரணில் விக்கிரமசிங்க வுக்கு வெற்றி வாய்ப்பைக் கொடுப்பதற்கு நல்ல சந்தர்ப்பமாக அமையும். சனாதிபதிக்குள்ள அதியுயர் அதிகாரங்களைப்பற்றி சனாதிபதி நன்கறிந்தவர். அதேபோல் ஜே.வி.பியும் சனாதிபதிக்குள்ள அதிகாரங்களைப்பற்றி நன்கறியும் தனக்குப் போட்டியிட முடியாவிட்டா லும் தனது கட்டளைக்கு அடிபணியும் ஒருவரை நியமிப்பதற்கு சனாதிபதி சகல



மகிந்த ராஜபக்ஷ

நடவடிக்கைகளையும் மேற்கொள்வார் என்பது எல்லோருக்கும் தெரியும். இதை ஜே.வி.பியும் ஆதரிக்கும் அப்போதுதான் ஜே.வி.பியும் தனது அதிகாரத்தை அவரிடம் காட்ட முடியும். ஆனால் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியினருக்கும் சனாதிபதிக்கும் கட்டுப்பட்டவர் அல்ல,ஆகவே இவர்கள் மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியாக வருவதை விரும்பமாட்டார்கள். சனாதிபதி அவர்கள் தனது கட்டளைக்கு அடிபணியக் கூடியவர் சனாதிபதியாக வேண்டும் என்று விரும்பினாலும் சனாதிபதியானவுடன் அவருக்குள்ள அதிகாரங்களை பாவித்தால் சந்திரிகாவாலும் அவரைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும். இந்தப் பரீட்சையில் இவர் நிச்சயமாக தோல்வியைத் தழுவிக்கொள்வார்.

மகிந்த் ராஜபக்ஷவைப் பற்றி அவரின் உள்ளத்தில் பீதியுண்டு. அவர் சனாதிபதியானால் பண்டார நாயக்கர்களின் சரித்திரத்தை முடித்துவிடுவார். அவரை நம்பமுடியாது. ஆகவே இந்த விடயத்தில் சனாதிபதியும் ஜே.வி.பியும் இணைந்தே செயற்படுவார்கள். மகிந்தராஜபக்ஷ வேட்பாளராக வருவதை தடுக்க முடியாவிட்டால் அவருக்குப் போட்டியிடுவதற்கு இடமளிக்க வேண்டும்.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் கட்சிக்குள் இதே மாதிரியான பிரச்சினை ஏற்பட்டு சனாதிபதி வேட்பாளராக ஹெக்டர்கொப்பேகடுவையை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் நிறுத்தினார்.அதே கொள்கையை சனாதிபதி சந்திரிகா மகிந்த ராஜபக்ஷ சார்பில் கடைப்பிடிக்க நேரிடும். அவருக்கு முழு ஆதரவையும் சிறிமா கொடுத்தார். ஆனால் அவருடன் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளராக ஜே.ஆர் ஜயவர்த்தன போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஆனால் மகிந்த ராஜபக்ஷ போட்டி யிடுவது பலமில்லாத எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஆகையால் வெற்றி வாய்ப்பும் இதில் அதிகமாக ராஜபக்ஷவுக்குண்டு. ஆனால் சந்திரிகா அவர்கள் சனாதிபதித்

**ராவய சிங்கள நாளிதழ் கட்டுரை ஆசிரியர் சேக்கர
மொழியாக்கம்–அ.சக்திவேல்**

தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்குப் பின்னால் இருந்து கால்களை வாரிவிட்டாலும் ராஜபக்ஷ விழமாட்டார். அப்படி ராஜபக்ஷவுக்கு சனாதிபதி வேட்பாளராக நிற்பதற்கு சந்திரிகா அனுமதி மறுப்பாரானால் கட்சி தோல்வியடைவது நிச்சயம். இதனால் வெற்றி வாய்ப்பு ரணிலைச் சென்றடையும்.

# பன்முதலீட்டு உத்தரவாத முகவர் நிலையத்தை இலங்கைக்கு அனுப்ப உலகவங்கியிடம் கோரிக்கை

## –உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் ஜயந்ததனபால

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் இடைமாற்று கால கட்டத்தில் பன்முதலீட்டு உத் தரவாத முகவர் நிலையமொன்றை (மைக்கா) உருவாக்க அரசாங்க சமாதானச் செயலகம் உத்தேசித் துள்ளது.

உள்நாட்டு வெளிநாட்டு மற்றும் புலம்பெயர்ந்தோரின் முதலீடுகளை உள்வாங்கியதாக இந்த அமைப்பு விளங்கும். இத்தகைய முதலீடானது இறுதிச் சமாதானத்திற்கான வாய்ப் புக்களை அதிகரிக்குமென்று அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபால நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெறும் உதவி வழங்கும்சமூக மாநாட்டின் இரண்டா வது நாளான நேற்று முன்தினம் உரையாற்றிய ஜயந்த தனபால, கடற் கோளால் பாதிக்கப்பட்ட பகுதிகளி லும் இந்த செயற்றிட்டம் நடை முறைப்படுத்தப்படும் வழிவகை குறித்து ஆராயப்படுமெனவும் குறிப் பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கை யில்;

இந்த மைக்காவானது உலகவங்கி யின் அரசியல் அபாய காப்புறுதித் திட்டமாகும். இது மோதல்கள் இடம் பெற்ற நாடுகளில் நடைமுறைப்படுத் தப்படுகிறது. இந்த முகவர் நிலையத் தின் புதிய முகாமைத்துவத்தின் கீழ்க்குறிப்பிட்ட நாடுகளில் மோதல் களின் பின் பொருளாதார அபிவி ருத்திக்கு அதிக அழுத்தம், கொடுத் துச் செயற்படுத்தப்படுகின்றது. மேற்குக்கரை, காஸா,ஆப்கானிஸ் தான் பகுதிகளில் இந்த மைக்கா திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

சராசரியாக பத்து மில்லியன் டொலர் பங்களிப்புடன் இந்த முதலீட்டு உத்தரவாத வசதித்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. பல் வேறுபட்ட மூலாதாரங்கள் இதற் குக் கிடைக்கின்றன. உலக வங் கித்திட்டமும் இதில் உள்ளடக் கப்படுகின்றது.

2005 இன் இரண்டாம் அல்லது மூன்றாம் காலாண்டுப் பகுதியில் மைக்கா குழுவை இலங்கைக்கு அனுப்புமாறு சமாதான செயலகம் உலக வங்கியிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

# புதிய தே.அ. அட்டைக்கு வர்ணப்படம் தேவை

சுனாமியால் தேசிய அடையாள அட்டைகளை தொலைத்த மக்க ளுக்கும் புதிதாக அடையாள அட் டைகளை எடுக்கவிருப்பவர்களும் அதற்கான படம் எடுக்கும்போது வர்ணப்படம் எடுக்க வேண்டுமென பதிவாளர் நாயகம்அறிவித்துள்ளார்.

இதற்கான அறிவுறுத்தல்கள் இம்மாத வர்த்தமானியில் பிர சுரிக்கப்பட்டுள்ளதுடன், உதவி அர சாங்க அதிபரூடாக கிராம அலு வலர்களுக்கும் அதற்கான அறி வித்தல் வழங்கப்படுவதாகவும், முல்லை மாவட்ட அரசாங்க அதிப ரின் அலுவலகத்தினர் தெரிவித் துள்ளனர்.

# பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவதை இலங்கை தொ.காங்கிரஸ் வரவேற்கிறது

## கட்சியின் செய்திக்குறிப்பு தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுடன்இணைந்து பொதுக்கட்டமைப்பு உருவாக் கும் சிறிலங்கா அரசின் முடிவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வரவேற்றுள்ளது.இது குறித்து அக்கட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் மீளமைப்புப் பணிகளை மேற்கொள்வது நம்முன் உள்ள முக்கிய பணி. இந்தப் பணிக்குப் பொதுக்கட்டமைப்பு மிகவும் அவசியம். இந்தப் பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதோடு அமைதிப் பேச்சுக்களையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று சனாதிபதியைக் கேட்டுக்கொள்கின்றோம்.

அமைதிப் பேச்சுக்களை வலுப்படுத்துகிற இப்பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஐக்கிய தேசியக்கட்சி சாதகமான நிலையை மேற்கொள்ளாதது துரதிர்ஷ்டவசமானது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யையும் பரிசீலிக்க முன்வந்தது. ஆனால் தற்போது நடைமுறைகள் உள்ளிட்டவற்றைப் பேசி அரசியலாக்குகிறது.

சிறிலங்காவின் அனைத்துக் கட்சிகளும் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பணிகளில் ஒருங்கிணைந்து நிற்க வேண்டும் என்று அதில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# பொதுமக்கள் வனவள அதிகாரிகள் மோதல் இருவர் பலி; இருவருக்குக் காயம்

எலகெர சரணாலயப் பகுதியில் கிராமவாசிகளுக்கும் வனவளத்திணைக்கள அலுவலர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் இருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

அப்பகுதியில் சோதனை நடவடிக்கையொன்றை மேற்கொள்ள வனவளத்திணைக்கள அலுவலர்கள் முனைந்த வேளையிலேயே இம் மோதல் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத் தின் காரண மாக அப்பகுதியில் பதற்றமேற்பட்டது.

எலகெர பிரதேச செயலாளர் மற்றும் பொலநறுவ மேலதிக மாவட்டசெயலாளர்,ஆகியோரிடமிருந்து கிடைத்த தகவல் ஒன்றையடுத்து சட்டவிரோதமாக மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்டிருந்த குழுவைப் பிடிக்க முற்பட்ட வேளையிலேயே இச்சம்பவம் இடம் பெற்றதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

நடவடிக்கையில் ஈடுபட்ட வனவளத்துறை அலுவலர்கள் மீது தாக்குதல் நடத்த கிராமவாசிகள் முற்பட்டதாக அப்பகுதிக்குச் சென்ற வனவள திணைக்களத்தின் பொல நறுவ மாவட்டத்தின் உதவிப்பணிப்பாளர் யு.எல் தௌசிக் தெரிவித்தார்.

அவ்வேளையில் மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே ஒரு கிராமவாசி உயிரிழந்தார்.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதிக்குச் சென்ற தங்களது அலுவலர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டதாக வும் அதில் ஒருவர் உயிரிழந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

கோபமடைந்த கிராமவாசிகள் வனவளத்திணைக்கள அலுவலகத்தையும் சேதமாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்ப டுகின்றது.

# இந்தியா- சிறிலங்கா கடற்படையினர் தொடர்பு இருநாடுகளின் பாதுகாப்புக்கும் முக்கியமானது

## -சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் வலியுறுத்து

(கொழும்பு)

இந்திய-சிறிலங்கா கடற்படையினருக்கிடையிலான நடவடிக்கை தொடர்பு இரு நாடுகளின் பாதுகாப்பிற்கும் முக்கியமானதென சிறிலங்காவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வந்த இந்திய கடற்படை உயர்கட்டளைக் கற்கைநெறிக் குழுவினருடன் பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இந்திய-சிறிலங்காவின் கலாச்சாரங்களை அவதானிக்கும் போது விடுவிக்க முடியாத உள்ளகத் தொடர்பாக உள்ளதாகக் குறிப்பிட்ட வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இந்திய-சிறிலங்காக் கடற்படையினருக்கிடையிலான கடந்த கால நல்லுறவு மிக முக்கியமானதெனவும் அவர் குறிப்பிட்டார்.

அங்கு அவர் பேசுகையில், இலங்கை ஒரு தீவாக உள்ளதால் கடற்படை முக்கியமானதொன்று எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்விடயங்களை வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் வைத்தே இக்குழுவினரிடம் கதிர்காமர் தெரிவித்துள்ளார். இந்தியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் மோகன்குமாரும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர்.

இக்கலந்துரையாடலில் சிறிலங்காவின் வெளிநாட்டுக் கொள்கை, தென்னாசியப் பிராந்திய ஒத்துழைப்பு,தென்னாசியப் பிராந்தியத்தால் முகங்கொடுக்கப்படும் சவால்கள் மற்றும் சர்வதேச விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகவும் சிறிலங்காவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரகம் தெரிவித்தது.

கடற்படை உயர் கட்டளைக் கற்கைநெறி ஒரு உயர் கற்கை நெறியாகும். இது இந்திய கடற்படை கப்ரன் கேணல் (இராணுவம்) குறுப் கப்ரன்(வான்படை) தர அதிகாரிகள் ஆகியோருடன் நடத்தப்படவுள்ளது. 17 ஆவது கடற்படைஉயர் கட்டளை கற்கைநெறியைச் சேர்ந்த கட்டளையதிகாரி எஸ்.என்.சிங் தலைமையிலான 29 பிரதிநிதிகளை இக்குழு கொண்டுள்ளது.

# மட்டு.நீதிமன்றில் குண்டுப்புரளி சிறிதுநேரம் பெரும் அமளிதுமளி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் காலை வெடி குண்டுப் புரளியினால் சிறிது நேரம் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

நீதிமன்றம் ஆரம்பமாவதற்கு முன் நீதிமன்றத்தினுள் குண்டு இருப்பதாக பொலிசாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே அங்கு அமளிதுமளி ஏற்பட்டது.

தகவலையடுத்து அங்கு சென்ற விசேட பொலிஸ் அணி நீதிமன்றத்தினுள்ளே இருந்த அனைவரையும் ஓரிடத்திற்கு கொண்டு சென்று ஆண்களை வேறாகவும், பெண்களை வேறாகவும் சோதனையிட்டதுடன் நீதிமன்றத்தினுள்ளும் தீவிர சோதனையையும் நடத்தியது.

எனினும் சந்தேகத்திற்கிடமாக எதுவுமேயில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குண்டுப்புரளியால் அங்கு சிறுதி நேரம் பதற்றநிலை காணப்பட்டு பின் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருந்த போதும் விசேட பொலிசார் நீதிமன்றத்திற்கு வெளியே பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

# அத்துரலிய ரத்னதேரர் பௌத்தமதத்தின் அவமானச்சின்னமாகிவிட்டார்-மேர்வின்சில்வா

(கொழும்பு)

பௌத்த போதனை செய்ய வேண்டிய பிக்குவான அத்துரலிய ரத்னதேரர் இன்று யுத்தப் பிரகடனம் செய்கிறார். இவர் பௌத்த மதத்திற்கே அவமானச்சின்னமாகிவிட்டார். காவியுடையைக் களைந்தெறிந்து விட்டு சாரத்துடன் திரிவதே இவருக்குப் பொருத்தமாக இருக்குமென பாராளுமன்றத்தில் வசைமாரி பொழிந்தார் கலாநிதி மேர்வின் சில்வா.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்னதேரர் விசேட உரையொன்றை நிகழ்த்தினார். அந்த உரையில் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவையும், அரசையும் பொதுக்கட்டமைப்பையும் அத்துரலிய ரத்ன தேரர் காரசாரமாக விமர் சித்தார். அத்துரலிய ரத்னதேரரின் இவ் உரையில் அரசதரப்பில் சூடான நிலையேற்பட்டது.

இந்நிலையில் தேரரின் உரையில் குறுக்கிட்ட பிரதியமைச்சர்களான மேர்வின்சில்வாவும், மஹிந்தானந்த அளுத்கமகேயும் தேரரை உரையாற்ற விடாது குரலெழுப்பிக் கொண்டிருந்தனர். ஆனால் இதை எதையும் காதில் போட்டுக்கொள்ளாத தேரர் மேலும் கடுமையான தொனியில் உரையைத் தொடர்ந்தார். இதனால் மேலும் ஆத்திரமடைந்த மேர்வின் சில்வா தேரர் மீது வசைமாரி பொழிந்தார். அப்போது அவர் கூறியதாவது

பௌத்த போதனை செய்து சமாதான கோஷம் போடவேண்டிய பிக்கு யுத்தப்பிரகடனம் செய்கிறார். இவரால் சண்டையிட முடியுமா? அல்லது அவரின் உறவினர்கள் யாராவது பாதுகாப்புப் படைகளில் உள்ளனரா? இந்தப் பிக்குவை இனிமேல் சுவாமி என அழைக்க முடியாது "மாத்தய" என்றுதான் அழைக்க வேண்டும் என்றார்.

# முற்றுப்பெறாத தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கவே ஜே.வி.பி அரசியலுக்குள் நுழைந்தது

## -சோமவன்ச அமரசிங்க கூறுகின்றார்

(கொழும்பு)

இலங்கையில் முற்றுப்பெறாத தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் மக்களின் உரிமையைப் பாதுகாக்கவுமே ஜே.வி.பி அரசியல் நீரோட்டத்திற்கு வந்தது. அதற்காக இடைக்கால நிர்வாகசபை வேண்டும் என்றோ,நாட்டைப் பிரிக்க வேண்டும் என்றோ நாம் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை என்று அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார். ஜே.வி.பி கட்சி ஆரம்பிக்கப்பட்டு 14 ஆம் திகதியுடன் 40 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு கொழும்பு நோமேட்ஸ் மைதானத்தில் கட்சியின் வரலாற்றை எடுத்துக் கூறும் கண்காட்சியை ஆரம்பித்து வைத்துப் பேசிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் சுயாதிபத்தியம், இறைமை, மக்களின் உரிமை என்பவையே எமக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அவற்றை முன்வைத்தே சனநாயகத்திற்கும் வந்தோம். இன்று மக்களின் அமோக ஆதரவைப் பெற்றுள்ளோம். இடைக்கால நிர்வாக சபை வேண்டும். நாட்டைப்பிரிக்க வேண்டும் என்றெல்லாம் நிபந்தனை விதித்து சனநாயகத்திற்கு வரவில்லை. வரலாற்றில் பிழைகளைச் செய்தோம். இன்று அவற்றைத் திருத்திக்கொண்டு சுயவிமர்சனத்தை மேற்கொண்டு மாற்றிவருகின்றோம். அபிவிருத்தி அடைந்த உலகுடன் முன்னேறி வருகின்றோம் எனவும் தெரிவித்தார்.


45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
குணராஜன் வலர்மதி
(மதி)

தோற்றம்: 30.11.1973

மறைவு: 06.04.2005

பங்குனித் திங்கள் 24 ஆம் நாள் (06.04.2005) அமரத்துவம் எய்திய எனது மனைவியின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன். நாளை அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் (20.05.2005) வெள்ளிக்கிழமை காலை 4 மணிக்கு பாண்டியன் பதிப்பகமுன் வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும், இதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டிகரண நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நிரந்தர முகவரி:
வெரிய கேணி
வியாபாரி மூலை,
பருத்தித்துறை-

தற்காலிக முகவரி:
பாண்டியன் பதிப்பக முன்வீதி
றெட்பானா, விசுவமடு

கணவர்:
ஆ.குணராஜன்
(பாபு)
குடும்பத்தினர்.

(6144)





வற்றாப்பளை கண்ணகை அம்மன்ஆலய

உற்சவ அன்னதான சபை

புதுக்குடியிருப்புப் பிரதேசம்

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்புப் பிரதேச மக்களால் நடாத்தப்பட்டு வந்த அன்னதான நிகழ்வு நாட்டின் நிலைமை காரணமாக சிறிது காலம் தடைப்பட்டு மீண்டும் இவ்வருடம் புதுக்குடியிருப்புப் பிரதேச மக்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வினை 22.05.2005 ஞாயிறு காலையிலிருந்து ஆரம்பமாகி 23.05.2005 திங்கள், 24.05.2005 செவ்வாய் வரை நடாத்த உள்ளோம். மேலும் இத்தொண்டு சிறக்க வர்த்தகப் பெருமக்கள், விவசாயப்பெருமக்கள், தொழிலாளர் பெருமக்கள் மற்றும் அம்பாள் அடியார்கள் அனைவரும் மனமுவந்து இப்பணி சிறப்புற ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டி நிற்கிறோம்.

மேலும் இப்பணி சிறக்க பணம், பொருள் முதலியனவற்றை மனமுவந்து உதவ வரும் தருமசீலர்களுக்காக 21.05.2005 சனி, 22.05.2005 ஞாயிற்றுக்கிழமைகளில் எமது ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் இயங்கவுள்ள விசேட கரும பீடத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பொருளாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.



இங்ஙனம்
வற்றாப்பளை கண்ணகை அம்மன்
ஆலய உற்சவ அன்னதான சபை,
புதுக்குடியிருப்புப் பிரதேசம்.

(சி-12001)

# பிரதமர் பதவியில் மன்மோகன்சிங் இன்னும் நான்கு ஆண்டுகள் நீடிப்பார்

## -சோனியாகாந்தி

(புதுடில்லி)

மன்மோகன்சிங் பிரதமர் பதவியில் சிறப்பாகச் செயற்படுகிறார். இன்னும் நான்கு ஆண்டுகளுக்கு அவரே பிரதமராக நீடிப்பார் என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி நேற்று முன்தினம் தெரி வித்தார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி ஐக்கிய முற்போக்குக் கூட்டணியை உருவாக்கிய அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி புதுடில்லியில் பத்திரிகையாளர்களுக்குத் தேனீர் விருந்து அளித்தார். இதில் சுமார் நூறு பத்திரிகையாளர்கள் கலந்துகொண்டனர். இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விருந்தில் பத்திரிகையாளர்களுக்குத் தென்னிந்திய மற்றும் வட இந்திய உணவுவகைகள் பரிமாறப்பட்டன. இதில் சோனியா காந்தி ஒவ்வொரு மேசையாகச் சென்று பத்திரிகையாளர்களிடம் சிரித்துப் பேசி கலந்துரையாடினார். பின்னர் அவர் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

கட்சியில் ஒழுங்கின்மையை நிரந்தரமாக அனுமதிக்க முடியாது. இது ஒரு தற்காலிக செயலேயாகும். இதை மிகவும் கவனமாக அணுகி இதற்கு ஒரு முடிவு எடுக்கப்படும்

மார்க்சிய கம்யூனிஸ்ட்டுடன் குறைந்தபட்ச திட்டத்தின் அடிப்படையில் செயற்பட்டு வருகிறோம். மேற்கு வங்காளம் மற்றும் கேரளாவில் நாங்கள் பிரதான கட்சிகள் என்பதனைத் தெரிந்து கொண்டுதான் அவர்களின் ஆதர வுடன் செயற்பட்டு வருகின்றோம். இவ்விரண்டு மாநிலங்களில் குறைந்தபட்ச திட்டத்திற்கு மேலாக பிரச்சினைகளின் அடிப்படையில் நாங்கள் தேர்தலைச் சந்திப்போம்.

காங்கிரஸ் கட்சிக்கு நேர்ந்துள்ள பிரச்சினை மற்றும் கட்சியில் இருந்து வெளியேறி புதியதாக காங்கிரசிற்குப் போட்டியாக கட்சி ஆரம்பிப்பது போன்றவை காங்கிரசுக்குப் புதியது அல்ல. இவைகளை மீறி நாங்கள் அனைத்து மாநிலங்களிலும் கட்சியை வலுப்படுத்தவுள்ளோம். தமிழகத்தைப் பொறுத்தவரை மாநிலத் தலைமையில் விரைவில் மாற்றம் வரும். இந்த மாற்றம் காங்கிரஸ் தலைமைத் தேர்வு முடிந்தவுடன் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆயுதத் தயாரிப்பிற்கு உயர் தொழில் நுட்பம் பயன்படுத்த அனுமதிப்பதில்லை- இந்தியப்பிரதமர்

(புதுடில்லி)

பாதுகாப்பு மற்றும் அணுசக்தி துறைகளில், உயர் தொழில் நுட்பத்தை ஆயுதத்தயாரிப்பிற்குப் பயன்படுத்த அனுமதிப்பதில்லை என்று இந்தியா சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதி அளித்துள்ளது.

நேற்று முன்தினம் புதுடில்லியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையிலேயே பிரதம மந்திரி மன்மோகன்சிங் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச சமுதாயம் அதிநவீன சாதனங்கள் விநியோகம் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றங்களை நம்பிக்கையோடு செயற்படுத்தப் போதுமான எச்சரிக்கை நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ளும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

புதிய தொழில் நுட்பங்களைச் சிறப்பிக்கும் வகையில் விருதுகளை நாற்பத்திநான்கு தனிநபர்களுக்கும் மன்மோகன்சிங் வழங்கினார்.

# வானிலிருந்து வானிலக்கைத்தாக்கும் ஏவுகணை இவ்வாண்டு பரிசோதனை

(புதுடில்லி)

வானிலிருந்து வான் இலக்கைத்தாக்கவல்ல ஏவுகணையை இந்தியா இவ்வாண்டு பரிசோதிக்கவுள்ளது.

பாதுகாப்பு ஆய்வு மற்றும் வளர்ச்சி அமைப்பின் இயக்குநர் புதுடில்லியில் இத்தகவலை வெளியிட்டார். இந்த ஏவுகணை வானத்தில் நீண்டதூரம் வரை செல்லக்கூடியது.

கணினியின் உதவியுடன் பறக்கும் விமானத்தை இந்த ஏவுகணை மூலம் குறிவைத்துத் தாக்கலாம். தற்போது அமெரிக்கா, ரஷ்யா, இஸ்ரேல் ஆகிய நாடுகளிடம் இவ்வகை ஏவுகணைகள் உள்ளன.

# ஐக்கிய முற்போக்குக் கூட்டணி பதவியேற்ற ஒருவருட நிறைவு விழாவில் பங்கேற்பதில்லை

## -இடதுசாரிக் கட்சிகள் முடிவு

(புதுடில்லி)

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மத்தியில் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவுபெறுவதைக் குறிக்கும் முகமாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை புதுடில்லியில் நடைபெறவுள்ள விழாவில் பங்கேற்பதில்லை என்று இடதுசாரிகள் முடிவு செய்துள்ளன.

நேற்று முன்தினம் புதுடில்லியில் இடம்பெற்ற இக் கட்சிகளின் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டதாக பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலர் ஏ.பி.வரதன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்;

அரசின் ஓராண்டுகாலச் செயற்பாடுகளை விளக்கும் வகையில் மத்திய அரசு விளம்பரம் செய்வதில் எந்தத் தவறும் இல்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மத்தியரசில் இடதுசாரிக்கட்சிகள் இடம்பெறவில்லையென்பதால் அந்த நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டியதில்லையென்று கூறிய அவர், இது விழாவைப் புறக்கணிப்பதாக ஆகாது என்றார்.

# அகில இந்திய காங்கிரஸ் தலைவராக மீண்டும் சோனியாவே தெரிவாவார்

(புதுடில்லி)

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேர்தல் அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி நடத்தப்படவுள்ளது.இதில் சோனியா காந்தி மீண்டும் போட்டியின்றி தேர்ந்து எடுக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவி ஏற்று வரும் 22 ஆம் திகதியுடன் ஓராண்டு நிறைவு பெறுகிறது. இதையொட்டி காங்கிரஸ் செயற்குழுக்கூட்டம் புதுடில்லியில் நடைபெற்றது. காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி தலைமை வகித்தார்.

பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் ஆளும் மாநில முதல்வர்கள், சட்டமன்ற காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சோனியா, மன்மோகன்சிங் உட்பட 25 தலைவர்கள் கூட்டத்தில் பேசினார்கள். சோனியா பேசும்போது ஓராண்டு ஆட்சியில் பிரமதர் மன்மோகன்சிங் மற்றும் அவரது அமைச்சரவை சகாக்களின் செயற்பாடு திருப்தியாக இருந்தது என்று பாராட்டினார்.

பிரதமர் மன்மோகன்சிங் பேசுகையில்; ஓராண்டு ஆட்சியில் என்னென்ன பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு காணப்பட்டுள்ளது என்பதைப் பட்டியல் போட்டுக் காட்டினார்.

பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட கூட்டத்தொடரை தேஜகூட்டணி கட்சிகள் புறக்கணித்தது பற்றிக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. நடக்கவிருக்கும் மழைகால கூட்டத்தொடரிலும் தே.ஜ. கூட்டணி அதேநிலையை மேற்கொண்டால் அதை எதிர்நோக்குவது எப்படி என்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

# இடைத்தேர்தல் முடிவுகளால் தி.மு.க கூட்டணியில் மாற்றம் இல்லை

## தி.மு.க தலைவர் கருணாநிதி

(சென்னை)

காஞ்சிபுரம், கும்மிடிபூண்டி இடைத்தேர்தல் முடிவுகளையடுத்து தமிழ் நாட்டில் தி.மு.க தலைமையிலான கூட்டணியில் மாற்றம் வராது என்று அக்கட்சியின் தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர்மேலும் கூறுகையில்;

எல்லா வீட்டிற்கும் கதவுகள் உண்டு வெளியில் செல்வதும் செல்லாததும் கூட்டணிக்கட்சிகளின் விருப்பம் என்று தெரிவித்தார்.

கடந்த மக்களவைத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் சனநாயக முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற்றது தற்போதும் இடைத்தேர்தலில் அ.இ.அ.தி.மு.க வெற்றி பெற்றிருப்பதால் மக்களவைத்தேர்தல் முடிவுக்கு மாறாக அடுத்த பொதுத் தேர்தலில் எந்தப் பெரிய மாற்றமும் ஏற்பட்டு விடாது எனவும் அவர் கூறினார்.

இதேவேளை கும்மிடிப்பூண்டி காஞ்சிபுரம் இடைத்தேர்தலில் அ.இ. அ. தி.மு.க வெற்றி பெற்றிருப்பதால் தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான சனநாயக முற்போக்குக் கூட்டணியில் மாற்றம் வராது என்று பா.ம.க நிறுவன இராமதாசும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக புதுடில்லிசென்றுள்ள அவர் நேற்று முன்தினம் விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறின்ார்.

அவர் மேலும் கூறுகையில்; கூட்டணியில் எந்தக் கட்சியும் விலகாது என்றும் இன்னும் பல கட்சிகள் கூட்டணியில் சேரும் எனவும் கூறினார்.



அலகாபாத்தின் கங்கை நதிக்கரையோரம் விற்பனை செய்வதற்காக நீர்ப்பழங்களை விவசாயிகள் படகு மூலம் கொண்டு செல்கின்றனர்.

# தீவிரவாதிகள் தாக்குதல்; 10 பொலிசார் காயம்

(புதுடில்லி)

இந்திய மத்திய பிரதேசத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பத்துப் பொலிசார் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கொண்டிருந்த பொலிசாரை இலக்கு வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

# விரிவான நிதிக்கொள்கையை விரைவில் அரசு வகுக்கும்

## —ப. சிதம்பரம்

(புதுடில்லி)

நிதித்தேவைகள் பற்றி விரிவான கொள்கை ஒன்றை செப்ரெம்பர் மாதத்திற் குள் அரசு வகுக்கும் என்று நிதிய மைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பின் ஆண்டுக்கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்நிய நேர்முதலீடு, அந்நிய தாபன ரீதியிலான முதலீட்டுப் பணம் அனுப்புதல் மற்றும் வெளிவர்த்தகக் கடன் வாங்குதல் ஆகியவை பற்றிய கொள்கைகள் மேலும் வெளியார் முதலீட்டை ஈர்க்கும் வகையில் மறுபரிசீலனை செய்யப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டப்பேரவைத் தேர்தலிலும் தி.மு.க.தலைமையிலான சனநாயக முற்போக்குக் கூட்டணி தொடரும்

## -ஜி.கே.வாசன்

தமிழ் நாட்டில் வரும் சட்டப்பேரவைத் தேர்தலிலும் தி.மு.க. தலைமையிலான சனநாயக முற்போக்குக் கூட்டணி தொடரும் என்று தமிழ் நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் ஜி.கே.வாசன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சென்னையில் நேற்று முன்தினம் அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்;

சட்டப்பேரவைக்கு நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் கிடைக்கும் தீர்ப்பு தான் முழுமையான தீர்ப்பாக அமையும் என்று கூறினார். இடைத் தேர்தலைப்போல் பொதுத்தேர்தலில் மக்களைத் திசை திருப்பி விட முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உலகின் சிறந்த வீரர் விருதை ரோஜர் பெரடர் வென்றார்



"உலகின் சிறந்த வீரர்' விருதை ரோஜர் பெரடர் தட்டிச்சென்றார். வீராங் கனைகளில் கெல்லி ஹோம்ஸ் கைப்பற்றினார்.

ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாகச் செயற்படும் விளையாட்டு வீரர், வீராங் கனைகளுக்கு'லாரஸ்' விருது வழங் கப்பட்டு வருகிறது. 2004 ஆம் ஆண் டிற்கான இவ்விருது வழங்கும் விழா போர்த்துக்கல்லிலுள்ள லிஸ்பன் நகரில் கடந்த திங்கள் நடந்தது. இதில்' உலகின் சிறந்த வீரர்' விருதை சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெரடர் கைப்பற்றினார். 23 வயதா கும் இவர் டென்னிசில் வீழ்த்த முடி யாத வீரராகக் கருதப்படுகிறார்.

2004இல் அவுஸ்திரேலியன், விம்பிள்டன்,யு.எஸ்.,ஓபன் என மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென் றுள்ளார். தவிர தொடர்ந்து உலகின் முதல்நிலை இடத்தைத் தக்க வைத்து வருகிறார்.

பெண்கள் பிரிவில் பிரிட்டனின் கெல்லி ஹோம்ஸ் 'சிறந்த வீராங் கனை'விருது பெற்றார். இவர், எதென்ஸ் ஒலிம்பிக்கில் 800 மற்றும் 1,500 மீற்றர் ஓட்டப்பிரிவில் தங்கம் வென்றுள்ளார். இவ்விருதுக்கும் ரஷ் யாவின் மரியா ஷரபோவா (டென் னிஸ்), ஒலிம்பிக் போல் வால்ட் சம்பி யன் எலீனா இசினபியேவா ஆகியோ ரும் பரிசீலிக்கப்பட்டனர்.

"சிறந்த கால்பந்து அணி"க்கான விருதைக் கிரீஸ் வென்றது. 'யூரோ 2004' கோப்பை கைப்பற்றியதன் மூலம் இவ்விருதைத்தட்டிச் சென்றது கிரீஸ்" சிறந்த இளம் வீரர்' விருதை சீனாவின் 21 வயது லீ ஜியாங் பெற்றார். இவர், ஒலிம்பிக் தடகளப் போட்டியில் (110மீ., தடை ஓட்டம்) தங்கம் வென்ற முதல் சீன வீரர் என்ற சாதனை படைத்தவர். 'சிறந்த ஊனமுற்ற வீரர்' விருது கனடாவின்






சான்தல் பெடிக்லருக்கு வழங் கப்பட்டது. 'வீல்சேர்' தடகள வீரரான இவர் பாராலிம்பிக் போட்டியில் ஐந்து தங்கம்வென்றவர்.

வழக்கமான போட்டிகள் அல் லாமல் விளையாட்டில் சாகசம் படைத்தவருக்கான விருதைப் பிரிட் டன் வீராங்கனை எலென் மெக் ஆர் தர் பெற்றார். 28 வயதாகும் இவர், பாய்மரப்படகில், 71 நாட்களில் கடல் வழியாக உலகைச் சுற்றிப் புதிய சாதனை படைத்தவர்.

இவ்விருதுகளுக்கான வீரர், வீராங்கனைகளை 40 பேர்கொண்ட முன்னாள் ஜாம்பவான்கள் அடங்கிய குழு தேர்வு செய்தது. இதில் பெக்கர் (டென்னிஸ்),இயான் பொத்தம் (கிரிக்கெட்) ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர். விருது வழங்கும் விழாவில் நட்சத்திரக் கால்பந்து வீரரான இங்கிலாந்தின் டேவிட் பெக்காம் அவரது மனைவி விக் டோரியா, பிரபல 'ஹொலிவுட்' நடிகர் ஜாக்கிசான் உட்பட பல பிரபலங்கள் கலந்துகொண்டனர்.

# சிறிலங்கா கிரிக்கெட் சபைக்குள் குழப்பம் முடிவெடுக்கவேண்டிய நிலையில் வீரர்கள்



இலங்கை கிரிக்கெட்சபையில் ஏற்பட்டுள்ள குழப்பநிலை காரணமாக வீரர்கள் இறுதித் தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டிய நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.


தற்போது பதவியேற்றிருக்கும் இடைக்கால கிரிக்கெட் சபை வீரர் களின் கொடுப்பனவு விடயத்தில் அக்கறை காட்டாததாலும் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதாலும் இந்த இக்கட்டான நிலை உருவாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக அணியின் சிரேஷ்ட வீரர்களும், அவர்களின் சங்கமும் இணைந்து இறுதித் தீர்வொன்றை எடுக்கும் நிலை உருவாகியுள்ளது.

தற்போதைய சபையினால் எவ்வித நன்மையும் கிடைக்கவில்லை என்றும் வருடாந்த ஒப்பந்தக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக் கப்படும் வேளை கிரிக்கெட் பற்றி ஒன்றும் தெரியாதவர்களும் சபையில் அங்கம் வகிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இதுவரை காலமும் பொறுத்திருந்த வீரர்கள் தற்போது கிளர்ந் தெழ ஆரம்பித்திருப்பதால் கிரிக்கெட் ஆட்டத்துக்கே பெரும் ஆபத்து ஏற்படும் வாய்ப்புத் தோன்றியிருப்பதாகவும், இந்த முரண்பாடுகள் தீர்க் கப்படாவிட்டால் வரும் ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான டெஸ்ட் ஆரம்பிக்கும்போது என்றுமில்லாத வகையில் வீரர்கள் நடவடிக்கைகளில் ஈடுபட நேரிடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பீட்சாம்பிரஸ் மிகச் சிறந்த வீரர்



'சம்பிராசை மிகச் சிறந்த வீரர்' என்று பாராட்டுகிறார் முன்னாள் விம்பிள்டன் டென் னிஸ் சம்பியன் பேட்கேஷ், அவுஸ்திரேலி யாவைச் சேர்ந்த டென்னிஸ் வீரரான பேட் கேஷ் மூன்று நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார். "நான் சந்தித்தவர்களிலேயே சிறந்த வீரராக அமெரிக்காவின் பீட்சாம் பிராசைக் குறிப்பிடுவேன். தொழில் நுட்ப ரீதியாக விளையாடுவதில் மனிதர் கில்லாடி. அவரது மன உறுதியைப் பாராட்டியே ஆக வேண்டும். திறமைமிக்கவர் அவர். அவரது மனநிலை எப்போது எப்படி செயற்படும் என பதை யாராலுமே கணிக்கமுடியாது"என்றார்.

# 11பேர் கொண்ட கிரிக்கெட் போட்டியை 12 பேர் கொண்டதாக மாற்ற யோசனை



கவாஸ்கர்

இதுவரை கிரிக்கெட் போட்டி களில் களத்தில் நிற்கும் 11 பேர் கொண்ட அணியில் மேலும் ஒருவரை இணைத்து 12 பேர் கொண்ட அணியாக மாற்று வதற்கு முன்னாள் இந்திய அணித்தலைவர் சுனில் கவாஸ் கர் யோசனை தெரிவித்துள்ளார்.

அதன்படி அணியில் வீரர் ஒருவர் திறமையாகச் செயற் படாதவிடத்து அவரை நீக்கி விட்டு வேறொருவரை நிறுத்தலாம். இது துடுப்பாட்டம், பந்து வீச்சு, விக்கெட்காப்பு, களத்தடுப்பு யாவற்றிற்கும் பொருந்தும். இவ்வாறு விதிமுறைகள் கொண்டுவரப்பட்டால் அது ஏனைய விளையாட்டுக்களிலும் பின்பற்றப்படலாம். அத்துடன் போட்டிகளில் விறுவிறுப்பையும் ஏற்படுத்தும் என கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட்சபைக் கூட்டத்தில் இந்த யோசனை தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவர் மேலும் யோசனை தெரிவிக்கும்போது தற்போது நடைமுறையிலிருக்கும் 50 ஓவர் போட்டியில் முதல்15 ஓவர் களவியூகம் 20 ஓவர்வரை இருக்கும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் இது போட்டியின் வெற்றி தோல்விகளை எதிர்வுகூறக்கூடியதாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

# காலி மைதானத்தைக் கண்டு வேதனை அடைந்தேன் -பொத்தம்

களை இழந்த காலி மைதானத்தைக் கண்டு மனம் வேதனை அடைந்ததாகத் தெரிவித்துள்ளார் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரர் இயான்பொத்தம், கடந்த மாதம் இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடச்சென்றிருந்தார். அப்போது அவர் காலி மைதானத் தையும் பார்வையிட்டார் கிரிக்கெட்டை உயிராக நேசித்த வீரர் அல்லவா! மைதானத்தின்சேதத்தை பார்த்ததும் மனம் கலங்கி விட்டார், லிஸ்பனில் நேற்று முன்தினம் தனது தெற்காசியப் பயணம் குறித்து நிருபர்களிடம் இவர் பேசுகையில்: "ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு இதேகாலிமைதானத்திற்கு ஒரு வர்ணனையாளராக வந்தேன்நான் உட்பட ஆறு பேர் மைதானத்தை ஒட்டியுள்ள கடற்கரை வீட்டில் தங்கி இருந்தோம். எழில் கொஞ் சும் அந்த வீடு தற் போது தரைமட்ட மாகி விட்டது. மைதா னமும் பலத்த சேத மடைந்துள்ளது. இந்தக் காட்சி கண் களை விட்டு அகல வில்லை. காலியை பார்த்துவிட்டு வந்த பின்னர் மனம் பெரி தும் பாதிப்படைந் துள்ளது என்றார்.




# நடுவர் தீர்ப்பை எதிர்த்து முறைப்பாடு செய்யலாம் ஐ.சி.சி.கூட்டத்தில் ஆலோசனை



கிரிக்கெட்டில் நடுவர் அளிக்கும் தீர்ப்பே இறுதியானது. இது தவ றாக இருந்தாலும் கூட வீரர்கள் ஏற்கத்தான் வேண்டும். இந்த நிலை மாறப்போகின்றது. நடுவரின் தீர்ப்பை எதிர்த்து முறையீடு செய்யும் உரிமை சம்பந்தப்பட்ட வீரர், தலைவருக்கு அளிக்கப்படவுள்ளது. டுபாயில் கவாஸ்கர் தலைமையில் ஐ.சி.சி.உறுப்பு நாடுகளின் கிரிக்கெட் கமிட்டியின் இரண்டு நாள் கூட்டம் நடந்தது. இதில் 12 நாடுகளின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

ஒருநாள் கிரிக்கெட்டில் விறுவிறுப்பை அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. முதல் 15 ஓவர் களத்தடுப்பு விதிமுறையை மாற்றலாமென உறுப்பினர்கள் கருத்துத் தெரி வித்தனர். இதன்படி போட்டியின் எந்தக்கட்டத்தில் வேண்டு மானாலும் இந்த விதிமுறையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். 50 ஓவரை இரண்டு பகுதிகளாக (25 ஓவர் வீதம்) பிரித்து விளையாடுவது பற்றியும் ஆராயப்பட்டது.

இதேபோல நவீன தொழில் நுட்பத்தை அதிகளவில் பயன்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது. களத்தில் இருக்கும் நடுவரின் தீர்ப்பை எதிர்த்து முறையீடு செய்யலாம் என்ற புது மையான முடிவும் எடுக்கப்பட்டது. சந்தேகம் எழுந்தால் சம்பந் தப்பட்ட துடுப்பாட்டவீரர் அல்லது களத்தடுப்புச் செய்யும் அணியின் தலைவர் டீ.வி. நடுவரிடம் முறையீடு செய்யலாம். இதனை சோதனை ரீதியாக அமுல்படுத்தலாம் என்று உறுப் பினர்கள் ஆலோசனை தெரிவித்தனர்.

# எவரெடிக் கிண்ண கால்பந்துப்போட்டி வவுனியாவை தோற்கடித்தது கிளிநொச்சி

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்டுவரும் 19வயதிற்குட்பட்டோருக்கிடையிலான எவரெடிக் கிண்ணத்திற்கான கால்பந்து சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி மாவட்ட லீக் அணி வவுனியா மாவட்ட லீக் அணியைத் தோற்கடித்துள்ளது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை மூன்று மணிக்கு நடைபெற்ற இப் போட்டியில் கிளிநொச்சி லீக் அணி 4-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்றது.

அ.இந்திரன் இரண்டு கோல்களையும் ஸ்ரீ.பிரதீஸ் லோ. ஜீவராஜ் தலா ஒவ்வொரு கோல்களையும் போட்டனர். மத்தியஸ்தர்களாக அமலன், வசிகரன்,சதீஸ் ஆகியோர் கடமையாற்றினர்.

முன்னதாக வவுனியா உதவிப்பிரதேச செயலர் எஸ்.சிறி.வவுனியா லீக்கைச் சேர்ந்த தவராசா, கிளிநொச்சி லீக்கைச்சேர்ந்த க.புவனேந்திரராசா, ஆகியோருக்கு வீரர்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட விளையாட்டு அலுவலர் அண்ணாத்துரை கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் மேலும் விளையாட்டு அலுவலர்களும் கலந்து கொண்டனர்.




பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திர வீரரான ரொனால்டோ ஐ.நா. வளர்ச் சித்திட்ட நல்லெண்ண தூதராக பலஸ் தீனம் சென்றிருந்தார். இவர் ரமலாவில் குட்டி ரசிகை தந்த மிகப்பெரிய அன் பளிப்பை பெற்றுக் கொண்டு ஆனந்த மாகச் சிரிக்கிறார்.

# மாஸ்டர்ஸ் செஸ் தொடர் இரண்டாவது இடத்தில் ஆனந்த்



மாஸ்டர்ஸ் செஸ் தொடரின் ஐந்தா வது சுற்றுப்போட்டியை விஸ்வநாதன் ஆனந்த் சமன் செய்தார். பல்கேரியா வின் சோபியா நகரில் எம்.டெல் மாஸ் டர்ஸ் செஸ் தொடர் நடக்கிறது. ஐந் தாவது சுற்றுப்போட்டி நேற்று முன் தினம் நடந்தது. இதில் இந்தியாவின் நட்சத்திர வீரரான ஆனந்த் இங்கி லாந்தின் மைக்கேல் அடம்சை எதிர்த்து விளையாடினார். இருவீரர் கள் இடையே கடும் போட்டி காணப் பட்டது. 54 ஆவது காய் நகர்த்தலு டன் போட்டியை சமன் செய்ய இரு வீரர்களும் சம்மதித்தனர். இதன் மூலம் ஆனந்த் 2.5 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைத் தக்க வைத் துக்கொண்டார். ஆடம்ஸ் மூன்று புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தில் இருந்து வருகிறார் மற்றொரு போட்டியில் முதல்நிலை வீரரான ரஷ்யாவின் விளாடிமிர் கிராம்னிக் ஹங்கேரி வீராங்கனை ஜூடிட் போல்கரை வீழ்த்தி மூன்று புள்ளிகளுடன் முதல் இடத்திற்கு முன்னேறினார்.

## சிந்தனைக்கு



சுதந்திரம் தான் மனித வாழ்வுக்கு அர்த்தத்தைக் கொடுக்கின்றது; முழுமையைக் கொடுக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 19-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

# கவனிக்க எவருமில்லை?

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிக் கொண்டிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் பயணம் செய்த படகு மூழ்கியதில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் எட்டு அப்பாவிப் பொதுமக்கள் மரணமாகியுள்ளனர். இப்படகு விபத்து எவ்வாறு ஏற்பட்டது? யார் காரணம்? என்பது ஒரு புறம் இருக்க அநியாயமாக அப்பாவிப் பொதுமக்கள் எட்டுப் பேர் இறந்து போய்விட்டனர் என்பதே நிஜமானதாகும்.

இலங்கையில் கடும் யுத்தம் ஒருபுறமும், சிறிலங்கா ஆயுதப் படையினரின் இனப்படுகொலைகள் மறுபுறமாக நாட்டில் பெரும் இரத்தக்களறி ஏற்பட்ட வேளையில் உயிருக்குப் பயந்து பாதுகாப்புத் தேடிக் கடல்வழியாகப் பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் தமிழகத்திற்குச் சென்றவர்கள் இன்று நாடுதிரும்ப முற்படுகையிலேயே இப்பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது.

தாயகத்தைவிட்டு பாதுகாப்புத் தேடிச் சென்றபோது இம் மக்கள் அனுபவித்த துன்பங்கள், துயரங்கள் சொல்லில் அடக்க முடியாதவை. சிறிலங்கா கடற்படையின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள், படகு விபத்துக்கள், கடற்பரப்பில் மணற்திட்டுக்களில் இறக்கிவிடப்பட்ட நிலையில் கடல் அள்ளிச் சென்ற மக்கள் எனப் பல நூற்றுக்கணக்கான மக்கள் பலியாகினர்.

அன்று உயிருக்காகத் தப்பி ஓடியவர்கள் தமது உயிரைக் கடலில் இழக்க வேண்டிய அவலம் ஏற்பட்டது இன்றும் அதை ஒத்த சூழ்நிலையே உள்ளது. தமிழகம் சென்ற மக்கள் இன்று தாயகத்திற்கு திரும்பும் வழியிலும் அத்தகைய அவலத்தையே சந்திக்க வேண்டியுள்ளது. அண்மைய நிகழ்வுகள் இதனையே எடுத்துக் காட்டுபவையாகவுள்ளன.

அதாவது கடலின் மத்தியிலுள்ள மணற்திட்டுக்களில் இறக்கிவிடப்படும் மக்களைக் கடல் அள்ளிச் செல்வதும், அகதிகள் மீது தாக்குதல் நடத்தப்படுவதும், பாலியல் வல்லுறவுகள்,கொள்ளைகள் போன்றவை இடம்பெறுபவையாகவும் உள்ளன. இறுதியாகத் தற்பொழுது படகு கவிழ்ந்து பலர் இறக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

தமிழ்மக்கள் அகதிகளாக தமிழகத்திற்குத் தப்பி ஓடும் போதும் அனுபவித்த துன்பதுயரங்களைப் போக்க எவ்வாறு எவரும் முன்வரவில்லையோ, அதேபோன்றதொரு நிலையே தற்பொழுதும் கடல் வழியூடாகத் திரும்பும் மக்களின் துன்பதுயரங்களைப் போக்கவும், அவர்களைப் பாதுகாக்கவும் எவரும் முன்வருவதாகத் தெரியவில்லை.

தமிழர் தாயக மண்ணில் மனித உரிமைகள் பற்றியும், மனித நேயம் பற்றியும் பேசும் சர்வதேச அமைப்புக்கள் பல செயற்பட்டு வருகின்றன. அது மட்டுமன்றி அகதிகள் தொடர்பான ஐ.நா அமைப்பொன்றும், சிறுவர்கள் தொடர்பான ஐ.நா அமைப்பொன்றும் உள்ளன.

ஆனால் இவ் அமைப்புக்கள் இன்று தாயகம் திரும்ப முற்பட்டு பரிதாபகரமாக உயிரிழக்கும் , அன்றி ஆபத்தை எதிர் நோக்கும், அன்றி துன்புறும் மக்களுக்கு எந்தளவிற்கு கைகொடுக்கின்றன, உறுதுணையாக இருக்கின்றன என்பது கேள்விக்குரிய தொன்றாகவே உள்ளது.

தமிழர் தாயகத்தில் இயங்கும் இத்தகைய அமைப்புக்கள் இங்கு குற்றம் கண்டுபிடிப்பதற்கு வந்துள்ளவை போன்று தமது செயற்பாட்டை மேற்கொள்பவையாக உள்ளனவே ஒழிய தமது அமைப்புக்களின் உயர்ந்த நோக்கம் , தமது கடமை என்பவற்றில் எத்தனை தூரம் முன்னேற்றகரமான செயற்பாட்டைக் கொண்டவையாகவுள்ளன என்பது ஆராய்வதற்குரிய தொன்றாகவே உள்ளது.

அவ்வாறு இல்லாதுவிடில், தொடர்ந்து பல மாதங்களாக இப்பெரும் அவலம் நடந்து கொண்டிருக்கையில், இவ் அமைப்புக்கள் இது குறித்து மௌனமாக இருக்க முடியாது. தாயகத்திற்கு திரும்ப முற்படும் மக்களைஏதோ ஒரு வகையில் பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்ப்பதற்கு அவை பெரும் முயற்சிகளை மேற்கொள்பவையாக இருந்திருத்தல் வேண்டும் .

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பவுள்ள மக்கள் தொடர்பான விவகாரம் இந்திய அரசு, சிறிலங்கா அரசு, தாயகம் திரும்பவுள்ள மக்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் என்பனவற்றுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். இதனால் இவ்அமைப்புக்கள் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியதாக இருக்கும் என்பது தெரிந்ததொன்றே.

ஆனால் எத்தகைய நெருக்கடிகள் இருப்பினும் இவ் அமைப்புக்களுக்குத் தாயகம் திரும்ப விரும்பும் மக்களைப் பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்க்கக்கூடிய பாரியபொறுப்புஉண்டு. அதனை இவ்அமைப்புக்களில் நிறைவேற்ற முடியாது போனால் இவ் அமைப்புக்கள் தமது மனிதாபிமானப் பணிகளைத் திறம்பட மேற்கொள்ளவில்லை எனக் கூறுதல் தவறாகமாட்டாது.

# போராடும் எம் மண்ணின் எழுச்சிக்கு புகழேந்தியின் ஓவியங்கள் வலுச்சேர்க்கும்

## ஓவியக் கண்காட்சி நிகழ்வில் க.வே. பாலகுமாரன்

(அலுவலக செய்தியாளர்)



ஓவியர் புகழேந்தியின் ஓவியங்கள் போராட்டம் நடக்கும் மண்ணில் எழுச்சியை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளன என தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அழகியல் கலா மன்றத்தில் நடைபெற்ற ஓவியர் புகழேந்தியின் கண்காட்சியில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மீள் சந்திப்பு நாளாக, ஒரு மீள்எழுச்சி நாளாக, நன்றிக் கடன் செலுத்தக்கூடிய நாளாக, அன்பினைப் பகிர்ந்துகொள்ளக் கூடிய நாளாக இந்நாள் அமைகிறது. தமிழ் நாட்டில் நாம் தங்கிருந்த நாட்களில் தமிழ்நாடு எமது முன்னணிக்களமாக இருந்த நாட்களில் தமிழ் இனமான உணர்வில் ஒன்று பட்டு, விடுதலைப் போராட்டத்தின் வீச்சின் பால் ஒன்றுபட்டு சர்வதேச மனிதநேய அடிப்படையில் ஒன்று பட்டு அன்று உருவான தோற்றப்பாட்டின் வெளிப்பாடாக இன்று இச்சந்திப்பு நடக்கின்றது.

ஓவியர் புகழேந்தி எமது மண்ணில் இருந்திருந்தால் போராளியாக இருந்திருப்பார். தமிழ் நாட்டிலே ஓவியப் போராளியாக உள்ளார். எங்கள் மனங்களிலே கனன்று கொண்டிருக்கும் விடுதலைத் தீ புகழேந்தியின் மனத்திலும் பற்றி எரிந்துகொண்டிருக்கிறது.

நண்பர் புகழேந்தியை எமது மண்ணிலே உள்வாங்கிக் கொள்கிறோம். அவருடைய ஓவியங்கள் ஊடாக அவரை உள்வாங்குகின்றோம் எனத் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் பத்துமணிக்கு ஆரம்பமான இக்கண்காட்சியினையும் பயிலரங்கினையும் ஆரம்பிக்கும் முகமாக தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஏற்றி வைக்க,அழகியற்கலாமன்றக் கொடியினை கலாமன்ற அதிபர் ஏற்றினார்.

தொடர்ந்து கண்காட்சி மண்டபத்தினை கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் திறந்து வைக்க, பொதுச் சுடரேற்றலோடு நிகழ்வு ஆரம்பமானது. நிகழ்வில் புகழேந்தியின் எண்ணங்கள் உருவான ஈழத்தமிழரின் போரியல் வரலாற்றையும் மற்றும் இனவாத சக்திகள் ஈழத்தமிழர் மீது மேற்கொண்ட கொடூரங்களைச் சித்தரிக்கும் ஓவியங்கள் உட்பட பலவாறான வரலாற்று மற்றும் பல்வேறு அம்சங்களை விளக்கும் ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன.

இக்காட்சியினைப் ஓவியர் புகழேந்தி அவர்களே நேரடியாக நின்று நெறிப்படுத்தினார்.

இக்கண்காட்சி இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச,கு)

# தலைவர் பிரபாகரனைப் புகழ்வது குற்றமல்ல பாவாணன் வழக்கில் 'பொடோ' ஆய்வுக்குழு தீர்ப்பு

தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைப் புகழ்ந்து பேசுவது ஒன்றும் குற்றமல்ல என்று தமிழின உணர்வாளர் பாவாணன் மீது தொடரப்பட்ட பொடோ வழக்கைமீளாய்வு செய்த பொடோ மறு ஆய்வுக்குழு அறிவித்துள்ளது.

பாவாணனைத் தமிழக அரசு இரு பொடோ வழக்குகளில் கைது செய்தது. சென்னை ஆனந்த் திரையரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாக பழ.நெடுமாறன், சு.ப.வீரபாண்டியன் உள்ளிட்டோருடன் பாவாணன் மீது ஒரு வழக்கும், ஈரோடு கவுந்தப் பாடி என்ற ஊரில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனைப் புகழ்ந்து பேசியதற்காக மற்றொரு பொடோ வழக்கும் தொடரப்பட்டன.

சென்னை வழக்கிலிருந்து அனைவரையும் விடுவித்து வழக்கைத் திரும்பப் பெறுமாறு ஏற்கனவே பொடோ மறு ஆய்வுக்குழு தமிழ்நாட்டு அரசுக்கு உத்தர விட்டிருந்தது. இந்நிலையில் கவுந்தப்பாடி வழக்கையும் திரும்பப் பெற தமிழ்நாட்டு அரசுக்கு பொடோ மறு ஆய்வுக்குழு உத்தர விட்டுள்ளது.

தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரனைப் புகழ்ந்து பேசுவதே குற்றமாகாது என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

# ரணிலுக்கான எரிபொருள் மானியம் ஐம்பது வீதத்தால் குறைப்பு

சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவருக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியம் 50 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு இதுவரை அவரின் உத்தியோகபூர்வ பயணங்களுக்காக வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியமானது கடந்த பத்தாம் திகதி முதல் 50 வீதத்தினால் குறைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. பத்தாம் திகதிக்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவரின் பயணங்களுக்குத் தேவையான அளவு எரிபொருள் தாராளமாக வழங்கப்பட்டு வந்துபோதும் கடந்த பத்தாம் திகதி முதல் அவருக்கு வழங்கப்படும் எரிபொருள்191 லீற்றராக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாராளுமன்றக் கூட்டத் தொடர்களிலும் நாடு முழுவதும் நடைபெறும் கூட்டங்களிலும் எவ்வாறாயினும் கட்டாயமாக கலந்துகொள்ள வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு எதிர்க்கட்சித்தலைவரிடம் விசேட வேண்டுகோள் விடுத்துள்ளனர். கொழும்பில் சனாதிபதி மாளிகையிலோ வேறு எங்கும் நடைபெறும் சந்திப்புகளில் கலந்துகொள்வதைத் தவிர்க்குமாறும் அக்குழு தமது தலைவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# பாராளுமன்றில் "கோரம்" இல்லை நேற்று சபை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சபை நடவடிக்கைகளை நடத்தி செல்வதற்கு தேவையான கோரம் எனப்படும் போதிய அளவான உறுப்பினர்கள் சபையில் இல்லாமையே சபை நடவடிக்கைகள் தள்ளி வைக்கப் பட்டமைக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றக் கூட்டத் தொடரை நடத்திச் செல்ல குறைந்தது 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருக்கவேண்டும். எனினும் சபாநாயகரைத் தவிர்த்து 224 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்க வேண்டிய சபையில் நேற்று 20 இற்கும் குறைவான அளவிலான உறுப்பினர்களே சமூகம் அளித்ததாகவும் கோரம் மணி ஐந்து நிமிடங்கள் ஒலிக்கப்பட்ட பின் பாராளுமன்ற ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(32)

## பால்மா விலையேற்றம்

(கொழும்பு)

பால்மாவின்விலை நேற்று முன்தினம் முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

400 கிராம் அங்கர் பால் மா 15 ரூபாவாலும், ரத்தி 400 கிராம் 18 ரூபாவாலும், ரெட்கென 400 கிராம் 26 ரூபாவினாலும் உயர்த்தப்பட்டுள்ளதென நியூசிலாந்து பால்மா உற்பத்தி சங்கம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் பால்மா விலை அதிகரித்துள்ளபடியால் இந்த விலை ஏற்றம் ஏற்பட்டுள்ளதென நியூசிலாந்து பால்மா சங்க தலைவர் எலக்செண்டர் ராவ் தெரிவித்துள்ளார் .

# பொதுக்கட்டமைப்புக் குறித்து முடிவின்றேல்
# சனாதிபதி பதவி விலக வேண்டும்
## -எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு தொடர்பான இறுதித் தீர்மானத்தினை சனாதிபதியே எடுக்கவேண்டுமென எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சமாதானத் திட்டத்தின் மத்தியஸ்தர்களான நோர்வே அரசை அழைத்தது பாராளுமன்றம் அல்ல என்றும் அவர் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நேற்று முன்தினம் பேசியபோதே இதனைத் தெரிவித்தார். பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் அனைத்துக் கட்சிகளும் தமது நிலைப்பாடுகளை வெளியிட்டுள்ளன. அவற்றை அடிப்படையாக கொண்டு சனாதிபதி முடிவு ஒன்றை எடுக்க வேண்டும். அவ்வாறு முடியாவிட்டால் அவர்பதவிவிலக வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். (32)

## திருமலையில்...

கண்காணிப்புக் குழு நேற்றுச் சென்று பார்வையிட்டதுடன் துப்பாக்கிச் சூடு, குண்டுவீச்சுக்களால் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களையும் சந்தித்துப் பேசியது.

மேலும் நேற்றைய தினமும் கைக்குண்டு வீச்சுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நேற்றுப் பிற்பகல் பிரதான வீதி மற்றும் இராஜவரோதயம் வீதி என்பன சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள கூட்டுறவு வர்த்தக வளாகம் மீது மூன்று கைக்குண்டுகள் வீசப்பட்டன. இதனால் கட்டட கண்ணாடிகள் உடைந்து விழுந்தன. எனினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. புத்தர்சிலை நீதிமன்ற உத்தரவின்படி அங்கிருந்து அகற்றப்படும் வரை ஹர்த்தால், கடையடைப்பு போராட்டம் தொடருமென தமிழ்மக்கள் பேரவை அறிவித்துள்ளது. இது தொடர்பில் இன்று பொலிசார் பௌத்த மற்றும் ஏனைய மதத்தலைவர்களுடன் பேச்சு நடத்தி இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இது இவ்வாறிருக்க புத்தர்சிலை அமைக்கப்பட்டுள்ள இடத்தில் பெருமளவு சிங்கள மக்கள் திரண்டிருப்பதாகவும் சிலையை அகற்ற எதிர்ப்பு தெரிவித்து வருதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சனாதிபதி...

விடுதலைப்புலிகளின் வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'தமிழ் நெற்' இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது.

உதவிவழங்கும் நாடுகள் சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதை அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வரவேற்றுள்ளார்.

இது தொடர்பான விடுதலைப் புலிகளின் கருத்தை சிறிலங்கா அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறுவதாக எரிக்சூல்ஹெய்ம் தெரிவித்தார். அத்துடன்2002 பெப்ரவரியில் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை இரு தரப்பும் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## பொதுக்கட்டமைப்பின்....

குறிப்பிட்டுள்ளது. இந்த மாத முடிவிலோ, ஜூன் மாதத்தின் முதல் வாரத்திலோ இந்த முகாமைத்துவ ஆவணத்தில் அரசும், விடுதலைப் புலிகளும் கையொப்பம் இடுவார்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சனாதிபதியுடன்...

எனவும் அதற்கு ஆதரவாக இவர்களைக் கருத்துக்களைக் கூற வைக்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. அவர்களைப் பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவாக வெளிப்படையாக கருத்துக்கூற வைக்க அவர் முயன்று வருவதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.(32)

## சர்ச்சைக்குரிய..

பாடுகள் தங்களுக்குக் கிடைத்திருப்பதாகப் பொலிஸ் அதிகாரிகள் இங்கு தெரிவித்துள்ளனர். அவ்வாறான கோயில்கள் பற்றிய சில விபரங்களையும் பொலிசார் சமர்ப்பித்தனர். அத்தகைய இடங்கள் இருப்பின் சரியான முறைப்பாடு ஒன்றின் அடிப்படையில் அத்தகைய சட்ட விரோதகட்டடங்கள் எழுப்பப்பட்டதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி மன்று கட்டளையிடுகின்றது " என்றும் நீதிபதி கணேசராஜா தெரிவித்தார்.

தீர்ப்பின் ஒரு கட்டத்தில் "வன்முறையை நிறுத்துவதற்காக அசோகச் சக்கரவர்த்திக்கு உபதேசம் செய்த புத்தபெருமான் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக திருகோணமலையில் முச்சக்கரவண்டி தரிப்பு நிலையத்திலிருந்து அகலுவார் என்று மன்று நம்புகின்றது" என்றும் நீதிபதி கணேசராஜா தெரிவித்தார்.

புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக பொலிசாரின் விண்ணப்பத்தின் மீது நகரசபையின் விசேட ஆணையாளர் சுந்தரம் அருமைநாயகம், நகர சபையின் செயலாளர் சிவசம்பு விபுலானந்தன், திருகோணமலை மாவட்டத் தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் ஆகியோர் நீதிமன்றில் சமுகமளித்திருந்தனர். பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் வை.ஜி.குணரத்னாவும் சமூகமளித்தார்.

புத்தர்சிலை அமைந்துள்ள இடத்துக்குப் பொறுப்பான முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கச் செயலாளர் அம்பலாங்கொட கீர்த்தி பிரியலால் நீதிமன்றத்திற்கு சமுகம் கொடுக்கவில்லை.

நகரசபை மற்றும் திருமலை மாவட்டத் தமிழ்மக்கள் பேரவை சார்பில் ஆஜுநரான சட்டத்தரணி ஆ.ஜெகஜோதி வாதிடுகையில்; நாங்கள் புத்தபெருமானின் கோட்பாடுகளுக்கு எதிரானவர்கள் அல்லர். சமயத்தை அரசியலுக்குப் பயன்படுத்துவதையே எதிர்க்கின்றோம்" என்று கூறினார்.

தற்போது புதிதாக புத்தர்சிலை வைக்கப்பட்ட இடத்திலிருந்து 75 மீற்றர் தொலைவில் 100 அடி உயர புத்தர்சிலை வைக்கப்பட்டுள்ளது. சங்கமித்தை விகாரையில் புத்தர் சிலை உள்ளது. பிரட்ரிக் கோட்டைக்குள் புத்தர்சிலை உள்ளது. இப்போது புத்தர் பெருமானின் சிலை மீன் சந்தைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது.

பரிசுத்தமற்ற இடத்தில் புத்த பெருமானின் சிலை வைக்கப்பட்டிருப்பது புத்தபெருமானை அவமதிப்பதாக அமைகின்றது. திட்டமிட்டு பிரச்சினையை உருவாக்கவேண்டும். மற்றும் நகரசபையின் அதிகாரத்துக்கு சவால் விட வேண்டும் என்ற நோக்குடன்தான் புத்தர்சிலை வைக்கப்பட்டிருக்கின்றது. இச் சிலையைத் தற்காலிகமாக அகற்றுவதன் மூலம்தான் அமைதி நிலையை ஏற்படுத்த முடியும் என்றார். சட்டத்தரணி ஜெகஜோதியுடன் சட்டத்தரணிகள் சுபாஷினி சித்திரவேலு, அப்துல்சத்தார், சாலி, துஷ்யந்தன், கரிகாலன், ரஜனிகாந்த், அன்ரனி ஆகியோரும் ஆஜரானார்கள்.

திருகோணமலை நகரின் மத்தியில் ஒட்டோச்சாரதிகளினால் புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டமையை எதிர்த்து நேற்று முன்தினமும் நேற்றும் திருமலையில் பணிப்புறக்கணிப்பு கடைப்பிடிக்கப்பட்டமைதெரிந்ததே. பணிப் புறக்கணிப்பின்போது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததுடன், ஐவர் காயமடைந்தனர்.

நகரில் பதற்றநிலை தோன்றியதையடுத்து அங்கு ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டடிருந்தது. நேற்று முன்தினம் திருமலை பொலிஸ் நிலையத்தில் பௌத்த மதத் தலைவர்களுக்கும், தமிழ்மக்கள் பேரவை உறுப்பினர்களுக்கும் இடையே பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்ற சந்திப்பில் இரு சாராரும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வாராததையடுத்து இவ் விடயத்தை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்ல முடிவுசெய்யப்பட்டது. தெரிந்ததே. (25)

## துப்பாக்கிச்...

விகாரை வீதியிலுள்ள அவரது வீட்டில்வைத்து நேற்று இரவு 9.30 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. காயமடைந்த அவர் திருகோணமலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## பொலிஸ்...

(வயது- 50) துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக்காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்ட நபர் தமது கட்சி அலுவலகத்திலிருந்து வழமை போல் பொலிஸ் பாதுகாப்புடன் சந்தைக்குப் பொருட்களைக் கொள்வனவு செய்யச் சென்ற சமயமே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொல்லப்பட்டவரின் உடலில் நெஞ்சு, கழுத்து, முதுகு உட்பட நான்கு இடங்களில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்படுவதாக மட்டக்களப்புப் பொலிசார் தெரிவித்தனர்.

## உலகை...

சனாதிபதியினுடைய வரலாறும் தான், இன்றைய நிலைப்பாடும்தான். தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைக் கொண்டு வருவதிலேயோ, தமிழ் மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய எந்த நிலைப்பாட்டை எடுக்கும் ஒரு விசுவாசமான ஒரு நிலைப்பாட்டுடனோ சனாதிபதி இல்லை. முழுக்க முழுக்க இந்த சர்வதேச உதவிகளைக் கவர்ந்து கொள்ளும் நோக்கோடு சர்வதேச சமூகத்தினுடைய பிரசன்னத்திற்கு முன்னால் இப்படியான கதைகளை அவிழ்த்து விட்டு இப்படியொரு பொதுக்கட்டமைப்பினை எப்படியாவது கொண்டு வரப்படும் என்பதை நம்பச்செய்து இந்த உதவிகளைப் பெறும் நோக்கோடு தான் இவ்வாறான கதைகளைக் கூறிக்கொண்டு இருக்கிறார்.

சந்திரிகா அம்மையாரின் இந்த வாய்ச்சவாடல்களில் எங்களுக்கு எந்தவித நம்பிக்கையும், இல்லை என்றார்.

சுனாமியால் இலங்கையில், தமிழ் பிரதேசங்களில் தான் கணிசமான இழப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கான உதவி வழங்கும் நாடுகளின் கூட்டங்களில் தமிழ் மக்கள் சார்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப் பினர் கூடஅழைக்கப்படவில்லையே எனக் கேட்டபோது, அர்சியல்துறைப் பொறுப்பாளர் பதிலளிக்கையில்;

உண்மையில் முழுக்க முழுக்கவே இலங்கை அரசாங்கத்தினுடைய ஒரு மாநாடுதான்.இது சர்வதேச சமூகத்தை அழைத்து ஒரு பக்கச் சார்பாக நின்று தங்களுடைய தரப்புக் கருத்துக்களை நம்பவைத்து அதற்கூடாக சர்வதேச சமூகத்தினுடைய உதவிகளைப் பெறும் நோக்குடனான ஒரு மாநாடு தவிர இது நிச்சயமாக இங்குள்ள யதார்த்தமான நிலைமைகளை எடுத்து விளக்கி சர்வதேச சமூகத்திற்கு உண்மையைக் கொண்டு சென்று ற்கூடாக சர்வதேச சமூகத்தினுடைய உதவிகளைக் கொண்டுவந்து தமிழர் தாயகத்திற்கும், சிங்கள தேசத்திற்கும் பகிர்ந்து கொள்கின்ற ஒரு நியாயபூர்வமான ஒரு ஒழுங்கமைப்பு என நான் நினைக்கவில்லை.

ஏனெனில் இதில் தமிழர் தாயகத்தினுடைய பிரதிநிதிகள் எவருமே சர்வதேச சமூகத்திற்கு உண்மைகளை எடுத்துச் சொல்வதற்கான ஒரு வாய்ப்பு இங்கு அளிக்கப்படவில்லை.

ஆகவே இந் நிலையில் நாங்கள் ஒரு நம்பிக்கையுடன் இருக்கின்றோம். சர்வதேச சமூகம் வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கலாமே தவிர சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்தை நம்பி முழுஅளவு உதவிகளை வழங்கும் என்று நாங்கள் நம்பவில்லை.

பல நாடுகள் மிகக் கடுமையான நிபந்தனைகளை விதித்திருப்பதாக நாங்கள் அறிகின்றோம் என்றார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான மீள் கட்டுமானத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையால் அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதி ஒரு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் கூட இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் எனக் கேட்டபோது பதில்கூறுகையில்;

இந்த மாநாடு முழுக்க முழுக்கவே இலங்கை அரசாங்கத்தினுடைய ஒருதலைப்பட்சமான, அவர்களுடைய ஒழுங்கமைப்பிற்குள் நடைபெறும் என்ற மாநாடு என்கின்றவகையில் சர்வதேச சமூகத்தால் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. எனவே ஏற்கனவே இலங்கைத்தீவில் சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதாகத்தான் சர்வதேச சமூகத்தினுடைய உதவிகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என சர்வதேச சமூகத்தினுடைய ஒரு நிலைப்பாடாகவும் இருக்கின்றது.

அந்தவகையில் ஏற்கனவே இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளெனக் கூறப்படும் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் போன்றவை இலங்கைக்கு உதவி வழங்குவதற்கு இலங் கையில் சமாதான முயற்சிகள் எவ்வளவு தூரம் முன்னேற்றகரமாக இருக்கின்றது என்பதை ஆய்வு செய்து இந்த அடிப்படையில் தான் உதவி வழங்கலாம் என்பதுமுன்னரே எடுத்த ஒரு நிலைப்பாடு. இந்த நிலைப்பாட்டில் இருந்து திசை திருப்புவதற்குத் தான் இலங்கை அர சாங்கம் இப்படியான ஒரு முயற் சியைச் செய்துதிருக்கின்றது. அந்த வகையில்

அமெரிக்காவோ அல்லது சர்வதேச சமூகமோ இதற்கொரு பெரிய முக்கியத்துவத்தைக் கொடுத்த மாதிரி இல்லையென்றுதான் நான் நினைக்கின்றேன். இந்த அடிப்படையில்தான் அவர்களுடைய பங்கு பற்றாமையும் இருக்கும் என்றார்.

அவர் மேலும் கூறுகையில்; சனாதிபதி தலைமையிலான சுதந்திரக்கட்சிக்கும், ஜே.பி.வி.க்கும் இடையில் ஓர் இறுக்கமான இணைப்பிருக்கின்றது. அது வெளியில் ஒரு தோற்றப்பாட்டைக் காட்டுகின்றது.

தங்க[illegible]குள்முரண்பாடுகள் அதிகமாக இ[illegible]பதாகவும் ஏதோ தாங்கள் ஒரு தீர[illegible]க் கொண்டுவர ஜே.வி.பி எதிர்ப்பதாகவும் காட்ட முயல்கின்றது. ஏனென்னில் இலங்கையினுடைய அரசியல் மரபிலே ஒரு சிறு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

உண்மையில் ஜே.பி.பியும், சனாதிபதியும் ஒரு ஒருங்கிணைப்பின் இணக்கப்பாட்டின் அடிப்படையில்தான் இந்த அறிக்கைகள் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.சனாதிபதி ஜே.வி.பியை திட்டுவார். ஜே.வி.பி. சனாதிபதியைத் திட்டும். பின்னர் இரவில் கூடிக் கதைப்பார்கள். இது தமிழர்களையும், உலகத்தையும் ஏமாற்றுவதற்காக எடுக்கப்படுகின்ற ஒரு தந்திரோபாயம் என்பதை நாங்கள் விளங்கிக் கொள்ளவேண்டும்.

ஏனெனில் இந்த மாநாட்டில் கூட ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினரான பிக்கு ஒருவர் போய் சனாதிபதியின் உரைக்குப் பிறகு உரையாற்றி இருக்கின்றார்

உண்மையிலேயே ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட பாதுகாப்புக்களெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டு ஒரு திட்டமிட்ட அடிப்படையில் நடத்தப்பட்ட சர்வதேச மாநாட்டிலே இடையில் குறுக்கிட்டு யாரும் பேச முடியாது.

சனாதிபதியும் இந்த அரசாங்கமும் திட்டமிட்டுதான் இவ்வாறு சொல்கின்றது. ஏனெனில் அதன் நோக்கம் என்னவெனில் தாங்கள் எவ்வளவோ செய்யமுனைவதாகவும், தங்களுக்கு இவ்வளவு பெரிய எதிர்ப்புக்கள் இருப்பதாகவும் காட்டிக்கொண்டு அதில் இருந்து விலகிச்செல்வதற்கான ஒரு அடையாளப்படுத்தலே மாநாட்டில் ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினரான பிக்குவின் உரைச்சம்பவம் என்றார்.

இலங்கையினுடைய இறைமையையும், ஒருமைப்பாட்டையும் ஏற்றுக் கொண்டு தங்களுடைய தரப்பில் இருந்து இறங்கியே விடுதலைப் புலிகள் இந்தப் பொதுக்கட்டமைப்பிற்கு வந்துள்ளார்கள் என சந்திரிகா கூறுகின்றாரே எனக்கேட்டபோது அவர்கூறுகையில்.;

உண்மையில் இந்தப் பொதுக் கட்டமைப்பு சம்பந்தமான ஓர் ஆலோசனையை இலங்கை அரசாங்கம் தந்தபொழுது அது பாராளுமன்றத்திற்கும், சனாதிபதிக்கும் கட்டுப்பட்டதாகத்தான் பொதுக்கட்டமைப்பு அமையவேண்டும் என்ற ஆலோசனையைத்தான் முதலில் எங்களுக

குத்தந்தது. நாங்கள் அதனை முற்றாக நிராகரித்துவிட்டு நாங்கள் ஓர் ஆலோசனையை அவர்களுக்குக் கொடுத்தோம்.

இலங்கையின் பாராளுமன்றமோ, சனாதிபதியோ, பிரதமரோ இதனைக் கட்டுப்படுத்துவதாக அமைய முடியாது. இது இலங்கைத்தீவில் ஒட்டு மொத்தமாக தென்கிழக்கு ஆசியா முழுவதிற்கும் ஒரு பேரனர்த்தம் நடந்து இலங்கையில் தமிழர் தாயகப் பகுதிபெருமளவு அழிவைச் சந்தித்தது. அந்தவகையில் இந்த மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு பேரழிவில் இருந்து அந்தக் கரையோரப் பகுதி மக்களை நாங்கள் மீளக்கட்டியெழுப்புவதற்கான ஒரு கட்டமைப்பு. இது இலங்கையினுடைய இறைமை அரசினுடைய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்கமுடியாது. ஆகையால் நாங்கள் ஒரு நல்லெண்ண அடிப்படையில் அவ சரமான மனிதாபிமான தேவைக்கு சர்வதேச உதவிகளைப்பெற்று எங்களுடைய மக்களின் மனிதாபிமான பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் இதற்கொரு கட்டமைப்பு தேவை.

இதற்கு இலங்கை அரசாங்கத்துடன் நாங்களும் இணைந்து இந்த மனிதாபிமானப் பிரச்சினைக்கு ஏற்படுத்தப்படுகின்ற ஒரு சிறு பகுதிக்காக செய்யப்படுகின்ற ஒரு கட்டமைப்பு இது முழுக்க முழுக்கவே இந்தச் சர்வதேச உதவிகளைப் பெற்று திட்டங்களைச் செய்கின்ற ஒருகட்டமைப்பே தவிர இது ஒரு பெரிய பூதாகரமான தமிழ் மக்களுக்கெல்லாம் ஒரு தீர்வைக் கொடுக்கின்ற கட்டமைப்பு அல்ல. இது இலங்கை அரசின் இறைமைக்கு உட்பட்டதாகவும் இல்லை. முழுக்க முழுக்க இதற்கு அப்பாற்பட்டு சுதந்திரமாக முடிவெடுத்து செயற்படக் கூடிய அமைப்பாக இருக்க வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்தி இந்தக் கட்டமைப்பு வரைவு கூட அந்த அடிப்படையில்தான் உள்ளது.

சனாதிபதியோ அல்லது பிரதமரோ இதனைக்கட்டுப்படுத்த இயலாது இந்த நிதியத்தைக் கையாள்வது கூட ஒருசர்வதேச நிறுவனத்திடம் இருப்பதைத்தான் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். இலங்கையினுடைய திறைசேரியோ, அரசின் கட்டுப்பாடோ இதற்குள் இருக்காது முழுக்க முழுக்க சர்வதேச சமூகத்தின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இது இருக்கும் என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.